தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 21-12-57 | சனிக்கிழமை | இதழ் 25

மஞ்சள் கொடி

மக்களாட்சி வளர வளர, கட்சிக் கொடிகளும், ஆட்சிக்கொடிகளும் பெருகிக்கொண்டு வருகின்றன. உலக நாடுகளின் அண்மைக்கால வரலாற்றைப் புரட்டும்போது புதிய கொடிகள் பிறந்த கதைகளும், அந்தக் கொடிகளுக்கு வர்ணம் பூசப்பட்ட காரணங்களும் படிப்பவர்களின் உள்ளங்களை ஈர்க்கின்றன. உலகத்தில், இப்போது எந்த நிலமும் எவருக்கும் உரிமையற்ற நிலையில் - கேட்பாரற்ற நிலையில் இல்லை. எந்த நாட்டைச் சார்ந்தவரானாலும், கடல்தாண்டி, எல்லை கடந்து, அவர்கள் போகவேண்டியிருந்தால் அந்த நாட்டு அரசியலாரின் அனுமதியின்றிப் போகமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை அடக்கி, ஓரினம், மற்றொரு இனத்தை மிதித்துக்கொண்டு வாழும் அநீதி இந்தியத் துணைக்கண்டத்தில் தவிர வேறு எந்தக் கண்டத்திலும் இல்லை.

ஏழை, நீதிக்குக் கட்டுப்படுவான், தர்மத்திடம் அவனுக்குப் பயமிருக்கும்; பணக்காரனுக்கு தர்மமாவது, அதர்மமாவது!— என்பது வழக்கு நீதி. அது அரசியலில் தலையெடுத்திருக்கிறது என்றால் இந்த இந்தியத் துணைக்கண்டத்தில்தான்!

உலகம் விரிந்துகிடக்கிறது. பலகோடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குள் பல தலைவர்கள் தலைதூக்கி நிற்கிறார்கள். அந்தத் தலைவர்கள் அத்தனை பேராலும் புகழப்படுகிற பெருந்தலைவர் அரசோச்சும் இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எங்கெனும் காணமுடியாத அடக்குமுறை நிகழ்கிறது. நீதிக்கும், அநீதிக்கும் கட்டுப்படாத பிறவிப் பணக்காரத் தலைவரல்லவா, அதனால்.

வெறும் தியாகத்தை மட்டும் தகுதியாகக் கொண்டு பதவியைப் பிடித்தவர்களுக்கு வேண்டுமானால், தேசியத்திற்கும், இனத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை தெரியாதிருக்கலாம். ஆனால் பண்டித நேரு அவர்கள் உண்மையில் வரலாற்றுப் பேராசிரியராகவே விளங்கவேண்டியவர், அவர் எதிர்க்கிறார் திராவிட இன எழுச்சியை என்றால், முறைப்படி அதற்கு நமக்குக் கிடைக்கும் ஈவுத்தொகை 'நேரு ஆதிக்க மோகம் பிடித்தவர்' என்ற பட்டம்தான்! ஆனால் அவருக்குக் கிடைத்திருக்கும் பட்டம் என்ன? மனிதர்குலமாணிக்கம்! இதற்குப் பொருள், அரசியல் தலைவர்களில் நேரு அழகானவர், சிவப்பானவர் என்பதுதான் என்று சொன்னால் தமிழகம் ஏற்றுக்கொள்ளுமே தவிர, வேறு எந்தப் பொருளுக்கும் தென்னாடு செவிசாய்க்கத் தயாராயில்லை! அதற்குக் காரணம் தமிழர்களின் பிரிவினை உணர்ச்சி மட்டுமல்ல! சென்னைக்கு வரும் போதெல்லாம் பண்டிதர் நடந்துகொள்ளும் முறையும் அப்படிப்பட்டதாக இருக்கிறது!

அண்மையில் வந்த நேரு அவர்கள் பெரியாரைக் கடிந்துபேசினார். அவர், ஆத்திரப்பட்டு பேசக்கூடாத வார்த்தைகளை மட்டும் உபயோகிக்கவில்லை. உலக நியதியையே காலடியிலே போட்டு மிதிக்கும் தோரணையில் அனலைக் கக்கியிருக்கிறார். தி. க. வினரைக் கண்டிக்கும்போது, 'அவர்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு எங்காவது போகட்டும் என்று பேசினார், அதற்குப் பெரியார் அவர்கள் பதில் பேசும்போது "நீ யார் என்னைப் போகச் சொல்ல" என்று கேட்டார்கள். நேரு அவ்வாறு சொல்லும்போது, அதற்குப் பெரியார் இவ்வாறு பதில் கூறியதில் என்ன தவறு? இல்லைதான்! ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்? தி. மு. கழகத்தின் அரசியல் பெருந்தன்மையை எடைபோட விரும்புவோர் அண்ணாவின் பதிலைத் தெரிந்துகொண்டால் 'ஞானோதயம்' பெறக்கூடும்.

'நேரு அவர்கள் திராவிடர்களை மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு போகச் சொல்கிறார். போவோம், எங்கே போவது? எந்த நாட்டுக்காரன் அந்நியரை நுழையவிட்டுப்பார்த்துக்கொண்டிருக்கிறான்?"—என்று அண்ணா அவர்கள் பதில் சொன்னார்கள்.

நேரு எவ்வளவு பெரிய தவறான கருத்தை அவசரத்தில் வெளியிட்டுவிட்டார் என்பது, அண்ணாவின் பதிலைப் படித்தால்தான் புரியும்.

அண்ணா அவர்கள் பேசியதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. நேரு அவர்கள் அந்தச் செய்தியைப் படித்திருந்தால் தமிழ்நாட்டில் பேசியது தவறு என்று உணர்ந்திருக்கக்கூடும்.

"காரிடேவிஸ் என்பவர் ஒரு அமெரிக்கர். அவர் அமெரிக்கப் பிரஜா உரிமையை ரத்து செய்துவிட்டு உலகப் பிரஜையாக மாற எண்ணினார். அவர் பிரான்சுக்குப் போனார், அந்த சர்க்கார் அவரை வெளியேற்றியது. இத்தாலிக்குப் போனார். அங்கேயும் அதே கதி! இப்போது அவர் இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள ஒரு பாலத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவர் தனக்குப் பக்கத்தில் ஒரு மஞ்சள் கொடியை ஊன்றி வைத்திருக்கிறார். அதுதான் அவரது கொடியாம்!" — இது பத்திரிகைச் செய்தி. ஆனால் நேருவோ திராவிடர்களை வெளியேறுங்கள் என்கிறார். எங்கே போகச் சொல்கிறார்! இடத்தைக் காட்டட்டும் பார்ப்போம்! ★

ஔவை பாடியது ஏன்?

'வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்'—என்ற செய்யுளை, ஔவையார், பிள்ளையாரின் மீது ஏற்றிப் பாடியதாகவே தமிழகம் இதுவரை நம்பிக்கொண்டு வருகிறது. அதை மருத்துவுரைக்கிருர் கருகாம்பாளையம் நண்பர். இந்தக் கருத்தை யாரும் இதுவரை கூறியதில்லை. இதுவேதான் உண்மை என்ருல் தமிழ் நாடு ஒரு புதிய உண்மையைத் தெரிந்துகொள்கிறது என்பதில் தவறில்லை. கட்டுரையில் சுவையிருக்கிறது; பொருள் இருக்கிறது. [ஆ-ர்.]

சித்தர்களென்பார் பண்டைக் காலத்து அறிவருள் ஒரு சாரார். அவர்க்கு அறிவரென்ற பெயரே அமைந்திருந்தது. யோகம் பயின்று - விரிந்த காட்சியுற்றுப் பொருள்களின் உண்மையியல்புகளையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிந்து நூல்கள் இயற்றினர். அவர்கள் யாத்த நூல்கள், யோக நூல், மருத்துவநூல், மந்திரநூல், இரசவாதநூல், ஞான நூல், என்னும் பலவகையைச் சார்ந்தவை.

சித்தநூலோர் கொள்கைப்படி சிவனுரிடத்து, நந்தி, அகத்தியர், முதலியோர் ஆதியில் மருத்துவ முறைகளைக் கேட்டனரெனவும்; அம்மருத்துவ முறையைத் திருமூலர் முதலிய பதினெண்சித்தர்கள் வளர்த்துப் பரவச் செய்தனரெனவும் கேட்கின்ருேம். இஃது எப்படியிருப்பினும், சித்த மருத்துவம் தமிழர்க்குரிய தென்பதைக் காலஞ்சென்ற சர். சுப்பிரமணிய ஐயர், பண்டிதர், கோபாலாச்சாரியார் என்பவர்கள் ஒப்பியுள்ளார்கள். நாமும் இக்கருத்தை ஒத்துக்கொள்கிருேம்.

'பதினெண் சித்தர்கள்' என்பது, பதினெட்டுச் சித்தர் மட்டும் இருந்தார்கள் என்பதைக் குறிப்பதில்லை. உண்மை என்னவெனில்; பண்டு தமிழ்ச் சங்கமிருந்ததுபோலச் சித்தர் சங்கமும் ஒன்று இருந்தது. அச்சங்கத்தின் உறுப்பினர்கள், பதினெண்மர். அச்சங்கத்தின் தலைவர் 'அகத்தியர்' எனப்படுபவர். எனவே, இக்காலத்தில், நகராட்சி—நாட்டாண்மைக் கழகத் தேர்தல் நடப்பதுபோல, அன்றும் சித்தர்களுக்குள் தேர்தல் நடந்திருக்கிறது. நகராட்சி மன்றத்தின் தலைவர் 'சேர்மன்' எனப்படுவதுபோல, சித்தர் சங்கத் தலைவர் 'அகத்தியர்' எனப்பட்டார். நகராட்சி மன்ற உறுப்பினர்கள் கவுன்சிலர்ஸ் எனப்படுவதுபோலச் சித்தர் சங்க உறுப்பினர்களும் சித்தர்கள் எனப்பட்டார்கள்.

சித்தர்கள் கழகங் கண்டு கன்னித் தமிழ் நாட்டிற்கு அருந்தொண்டாற்றியுள்ளார்கள். அங்ஙனம் பணி செய்த மருத்துவர்களில், தமிழ் மூதாட்டி என்று போற்றப்படும் ஔவையாரும் ஒருவர். ஔவையார்கள் பலர் என்று ஆய்வாளர்கள் குறிக்கின்ருர்கள். அதுபற்றி நமக்கு வாதம் வேண்டுவதில்லை.

ஔவையார் மிகுந்த தமிழ்ப் புலமை உடையவர்கள். பல இலக்கியங்கள் இயற்றித் தமிழ்த் தாய்க்கு அணிவித்திருக்கிருர்கள். அவருடைய பாடல்கள் எளிமையானவை-பொருள் ஆழமுடையவை - உள்ளுந்தோருள்ளுந்தோருள்ளமுருக்குபவை. ஒரே பாடலில் பல பொருள்களை அமைத்துக் காட்டுபவர். ஔவையார் சித்த மருத்துவத்திலும் சிறந்தவர் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டுக் காட்ட விழைகின்றேன்.

ஔவை ஆண்டவனை வேண்டிப் பாடுவதாகப் பாட்டு அமைந்துள்ளது. ஆண்டவனைப் பணிவதற்காகவே ஔவையார் பாடினுர் என்று கூறுபவர்களைச் சிந்திக்க வேண்டுகிறேம்.

'திரு'வென வைணவப் பெருமக்களால் போற்றப்படும், துளசி—மேகப்படையை வேகமாக ஓட்டும் குப்பைமேனி—(இது 'மேனி'யென்றே சித்தர் நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது) கையான் எனச் சித்தர்களால் போற்றப்படும் கையான் தகளையான கரிசலாங்கண்ணி—பொரை அல்லது புரையைக் கடியும் தும்பை—(இது 'தும்பி' எனவும் வழங்கப்படுகிறது). இந்நால்வகைச் செடிகளும் பூ முதல் வேர் வரைச் சித்த மருத்துவத்திற்குப் பயன்படும் பொருள்கள்.

மேற்காட்டிய நால்வகை மூலிகைகளின் தழைகளைக் கொண்டு வந்து சாறு பிழிந்து, ஒவ்வொரு வகைக்கும் கால் கால் படி சேர்த்துக் கொள்ள வேண்டும். பிறகு 'துப்பு' என இலக்கியங்களில் இடம் பெறும். 'நெய்' ஒருபடி எடுத்து அச்சாற்றில் கலந்து, - இவ்வைந்து பொருள்களையும் அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். மெழுகு பதத்தில் வந்தவுடனே, வடித்தெடுத்துக் கொண்டால், அது ஒரு சிறந்த இலேகியமாகும்.

இச்சிறந்த இலேகியத்தை நாளும் காலை-மாலை, வேளையில் உணவுக்குமுன், ஒரு நெய்க் கரண்டி அளவு உட்கொண்டால் உடலில் எந்தவித நோயும் வாராது. உள்ளுறுப்புகளும் மிகத் தூய்மையாக விருக்கும்.

★

இனி, ஔவையார் பாடலை நினைந்து, செய்யுளைக் கொண்டு கூட்டினல் பொருள் எளிதாக விளங்கும்.

'பூக்கொண்டு-துப்பார்
திருமேனித் தும்பிகையான்
பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு'

என்பது செய்யுள்.

'பூக்கொண்டு பாதம் திருமேனித் தும்பிக்கையான் துப்பார் தப்பாமல் சார்வார் தமக்கு' என்று கொண்டு கூட்டிப் பொருள் கொண்டால் மேலே விளக்கம் எளிதாகப் புரியும்.

குறிப்பு : பூக்கொண்டு பாதம்-பூமுதல் வேர் வரை; திரு-துளசிச் செடி; மேனி - குப்பைமேனி; தும்பி—தும்பைச்செடி; கையான்-கையான்தகளை என்னும் கரிசலாங்கண்ணி; துப்பு - நெய்; ஆர்-சேர்த்து.

வாக்குண்டாம் —

வாதம்-பித்த-சேத்தும மிகுதியாலும் - குறைவாலும் உடலில் நோய்கள் தோன்றும். இக்கருத்தை வள்ளுவப் பெருந்தகை,

'மிகினும் குறையினும் நோய்
செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று'

எனக் கூறுகின்ருர். இம்மிகுதிக் குறைவால், ஒருவனுடைய பேச்சுக்கு ஆதாரமாகிய நாக்குத் தன் செயலில் மாறுபடும். மாறுபடவே, புளிப்பு-கசப்பு-இனிப்பு ஆகிய குணங்கள் அதன் கண் தோன்றும். நாக்கின் கண் இக்குணங்கள் நீங்க, மேற்காட்டிய இலேகியம் உண்ணவேண்டும்.

இன்னும், நா, குளறிக்குளறிப் பேசும் அன்பர்கள் இதை உட்கொண்டாலும், அத்தீங்கு நீங்கி நா, நலம்பெறும். வாக்கு தூய்மையடையும்.

நல்ல மனமுண்டாம் —

உடலில் ஊறேதுமில்லாக் காரணத்தால் மனம் சஞ்சலமடைவதில்லை. அதனுல் உளம் தூய்மையடைகின்றது. காமக்குரோதாதியாகிய அறுவகைத் தீய குணங்களும், உளத்தினின்றும் எழாமல் மறைகின்றது. அதனுல் உளம் தெளிவடைகின்றது. ஒருமை நிலையிலும் நின்றுவிடுகிறது.

'மனவொருமை நிலையில் நிற்பவன் கண்ணே உலகம் நிலை பெற்று நிற்கும்' என்ற தத்துவம்.

'சுவையொளி யூறோசை
நாற்ற மொன்றைந்தின்
வகைதெரிவான் கட்டேயுலகு'

என வள்ளுவராலும் பேசப்படுகின்றது.

மாமலராள் நோக்குண்டாம் —

'மாமலராள்' என்ருல் திருமகள் என்று சொல்லுவர்ஆனுல், 'மாமலராள்' என்பது இரண்டு கண்களைக் குறிக்கும். கண்ணைச் செந்தாமரை மலருக்கு உவமையாகக் கூறுவர் புலவர். எனவே, கண்ணிலும் நல்ல ஒளி உண்டாகும் மனிதனுக்குமிகஇன்றியமையாத உறுப்புக்களில் கண்கள் முதலிடம் பெறும். அக்கண்களிலும் நோயுண்டாகாது. இந்த இலேகியம் உண்பதால்.

மேனிநுடங்காது —

இந்த இலேகியத்தின் குணத்தைச் சுருக்கமாகச் சொல்லப்புகின், உடல் என்றும் நோயால் இன்னலுறுவதில்லை. ஒவ்வொரு உறுப்பாகக் கூறின் விரியுமென்றே ஔவையும் இரண்டொரு உறுப்பைக் கூறி, எல்லாவுறுப்பு மடங்கிய, 'மேனிநுடங்காது' என்று கூறிவிட்டார்.

மேலே காட்டிய விளக்கத்தால், 'நாக்குத் தெளிவடைகிறது - மனம் தூய்மையுறுகின்றது. கண் ஒளி பெறுகின்றது-'என்பதைத் தெளியலாம்; இன்னும், 'உடலுக்கு எவ்வித இன்னலும் வாராது என்பதையும் கருத்தாகக் கொள்ளலாம்.

இனி ஔவை மூதாட்டியின் கவிதையைக் காணின், சுவை பல பயிக்கும்.

'வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி
நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி
தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு'

நாலடிகள் கொண்ட ஒரு பாடலில் எத்தனை கருத்துக்கள். கடவுள் பக்தர்கள் இதைக் கணபதிக்கு ஏற்றிப் பொருள் கொள்வார்கள். ஆனுல், உடல் நலம் உள்ள நலம் – தேடுபவர்கள் நாம் காட்டியவாறு பொருள் விரிப்பர்.

இதுநாள் வரையிலும் இப்பாட்டிற்கு இப்படியும் உரை செய்யலாம் என்று யாருமே எழுதியதுமில்லை. ஆனுல், கோவை இரத்தினசபாபதிபுரம், வைத்திய சிகாமணி சி. கே. குமாரசாமிப் பிள்ளை மட்டும்; இதற்கு விதிவிலக்காக விருந்தார். அன்னுரின் துணை கொண்டே யான் இக்கட்டுரையை வரைந்தேன்.

—க. சி. இராசியண்ணன்

ஏஜண்டு தோழர்களுக்கு—

'தென்றல் பொங்கல் மலர்' தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணு 8 நீக்கி பிரதி ஒன்றுக்கு ரூ 1-8-0 வீதம் பூராத் தொகையும் முன் பணமாக அனுப்பி வைக்க வேண்டும். முன் பணமின்றி கண்டிப்பாக மலர் அனுப்பி வைக்கப்படமாட்டாது. குறைந்த பிரதிகளே தயார் செய்கிருேம். தேவைக்கு முன் கூட்டியே தெரிவிக்கவும். மணியார்டர் கூப்பனில் "பொங்கல் மலருக்காக" என்று குறிப்பிட்டு எழுதுங்கள். தென்றல் பட்டியல் தொகையும் மலருக்கான தொகையும் சேர்த்து அனுப்பக்கூடாது.

நிர்வாகி,
தென்றல்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 4 ‖ 21—12—57 ‖ இதழ் 25

பலமாகத் தட்டுங்கள்!

ஆற்காட்டு ராமசாமியார், ஆச்சாரியார், போன்ற அரசியல் முன்னேடிகள், டில்லி சர்க்காரால் சென்னை சர்க்கார் நடத்தப்படும் விதம் பற்றி பெரிதும் வருத்தப்பட்டு பேசியது அண்மையில் எல்லாச் செய்தித்தாள்களிலேயும் வெளியாகியிருந்தது. அவ்வாறு துணிந்து சொன்னவர்கள் இருவர்தானென்ருலும், அந்தப் பேச்சுக்கு எதிரொலி அதிகமாக இருந்தது. டில்லித் தேவதைகளெல்லாம் மூக்கிலே விரல் வைத்தார்கள்.

சென்னை சர்க்கார், கேவலம்—ஒரு கார்ப்பரேஷனைப் போல், முனிசிபாலிடியைப் போல் தான் நடத்தப்படுகிறது — என்பதாக அந்தத் தலைவர்கள் துணிந்து சொன்னுர்கள். அந்த உண்மைக் கருத்தை நாடாளும் சென்னை அரசியலார் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. 'என் முதுகு காய்த்தால் உனக்கென்ன வலிக்கிறது' என்று சுரணை கெட்ட முறையிலே சென்னை அரசு இதுவரை ஊமையாக இருந்து வருகிறது.

கார்ப்பரேஷன், முனிசிபாலிடி—இவை இரண்டும் அதிகாரமற்ற விளம்பரச் சாவடிகள் தான் என்பதைச் சுட்டிக் காட்டி, அந்த முறையில்தான் சென்னை சர்க்காரும் இருந்து வருகிறது என்றே அந்த அரசியல் அறிஞர்கள் எடுத்துச் சொன்னுர்கள். சொன்னவர்கள் சாமான்யப்பட்டவர்களல்லர். நினைத்ததைச் சாதிக்கும் வக்கு, வகையற்ற ஆட்சியில் சிக்கிக் கொண்டவர்களானுலும், தன்னுடைய மூளை பலத்தாலேயே உலகத்தில் பெரும் புகழைப் பெற்றவர்கள். அரசியல் நீதி முறைகளை உலக மன்றத்தில் வாதிக்கும் பேராற்றல் பெற்றவர்கள். அவர்கள் சொன்னுர்கள் 'சென்னை சர்க்கார்' வெறும் பொம்மை என்று.

அமைச்சர்கள் என்போர் வரும் பொருளுரைப்பவர்களாக இருக்கவேண்டும்; அல்லது கூறும் வழியைப் பின்பற்றக் கூடியவர்களாகவாவது இருக்கவேண்டும். இரண்டும்அற்ற 'இடிதாங்கி'களாக இருந்தால் அந்த நாடு எங்ஙனம் வாழ்வு பெற முடியும்? அத்தகைய 'இடிதாங்கி'கள் கையில் தமிழகம் இருக்கும்வரை, எந்த நல்ல யோசனையும் வெற்றுபெறும் என்று நினைப்பது தவறு.

ஆனுல், துவக்கத்திலே குறிப்பிட்ட அரசியல் தலைவர்கள் இருவரும், எந்த ஸ்தாபனத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னுர்களோ அந்த ஸ்தாபனத்துக்காரர் விழித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மகிழ்ச்சி.

சென்னை நகராண்மைக் கழகத் தலைவி தாரா செரியன் அவர்கள் சென்ற வாரம் சென்னையில் நடைபெற்ற வரவேற்பு ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில், "நான் டில்லியின் கதவைப் பலமாகத் தட்டுவேன்" என்று கூறியிருக்கிருர்கள். இந்தக் கருத்தை அந்த அம்மையார் மனப்பூர்வமாகக் கூறியிருந்தால் தமிழகம் அவருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஒருபோதும் தயங்காது. ஏனென்ருல் இன்றைய காங்கிரசில் மூன்று விதமான கருத்துடையவர்கள் இருக்கிருர்கள்;

தென்னுடு - வடநாடு என்று பேசுவது அர்த்தமற்றது—என்பவர்கள் ஒரு சாரார்.

வடநாட்டுக் காங்கிரசின் அட்டூழியத்தைத் தாங்கமுடியாமல், அதே நேரத்தில் தமிழ் நாட்டுக் காங்கிரசை விட்டுப் பிரியவும் முடியாமல் ஒருவர் முகத்திற்காக மற்றவர் என்று சகித்துக் கொண்டிருப்பவர்கள்– மற்ருெரு சாரார்.

திராவிட இயக்கம் சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை என்று உணர்ந்து வெளிப்படையாகப் பேசுபவர்கள் மூன்ருவது சாரார்.

சென்னை மேயர் மூன்ருவது சாராரில் இடம் பெறுகிருர்.

'தட்டினுல் திறக்கப்படும்-கேட்டால் கொடுக்கப்படும்' என்று தலைவர் அண்ணு அவர்கள் அடிக்கடி குறிப்பிடும்அதே வாசகத்தை மேயர் குறிப்பிட்டிருக்கிருர்.

டில்லியின் கதவைத் தட்டட்டும்! பலமாகவே தட்டட்டும்! உண்மையாகவே தட்டினுலும் டில்லியிலிருப்பவர்களுக்கு அது பிரமையாகவே படும்! ஏனெனில் இதுவரை டில்லியின் கதவை எந்தத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களும் தட்டியதில்லையல்லவா!

நாடாளும் மந்திரிகளுக்கு நகராண்மைக் கழகம் பாடம் கற்பிக்குமாக!

தலைவி தவித்தாள்!

"தலைவி! அழுது அழுது உன் மலர்க்கண்கள் வாடிவிட்டனவே! உன் உடல் நலனைக் கருதியாவது நீ அழுவதைக் கொஞ்சம் நிறுத்தமாட்டாயா?"

தலைவியும் தோழியும் சோலையை அடைகின்றனர்.

சோலையை அடைந்த பிறகாவது தலைவியின் துயரம் மாறும் என தோழி நினைத்தாள். ஆனுல் தலைவியின் துயரமோ இரட்டிப்பாகியது! தலைவனும் தானுமாய் அந்த சோலையில் கூடிக் குலவிய காட்சிகளெல்லாம் தலைவியின் மனத்திரையில் பளிச்சிடுகிறது! ஆகவே தலைவனைப் பற்றிய ஏக்கம் பன்மடங்காகிறது! கண்களில் நீர்கப்புகிறது! துயரால் துவண்டவளாய் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து சினத்துடன் பேசுகிருள்:

"ஏ தென்றலே! உனக்குத் தெரியுமே, தலைவனின் பிரிவால் நான் எவ்வளவு துன்புறுவேனென்பது! அன்ருெருநாள் எங்கள் முயக்கிடையே நீ நுழைந்தபோது, உன்னுல் உண்டான அந்த இடைவெளியையும் என் நெஞ்சம் பொருமல் கண்கள் பசந்தனவே! இன்று அவர் பிரிவால் இவ்வளவு நாட்களாக வாடுகின்றேனே! நீ என் நிலையை அவரிடம் தூது சொல்லாயோ?

"குவளை மலரே! என் தலைவர் எப்போது திரும்புவார்? சொல்! நீ எப்படி சொல்லுவாய்! நீதான் என் கண்களை ஒக்கவில்லையென்று என் தலைவர் கூறிவிட்டாரே! அதனுல் கோபம் போலும்!

"தாமரை மலரே! நீயாவது கூறு! என் தலைவர் சீக்கிரம் திரும்புவாரா? ஓகோ! உன் இதழ்கள் என் உதடுகளைப்போன்று இல்லையே என்ற பொருமையா?"

"வானளாவி வளர்ந்திருக்கும் மூங்கில்மரமே! நீயாவது பகரமாட்டாயா என் தலைவரைப் பற்றி? உனக்கும் என்மேல் கோபம் தானு? நீ என் தோளைப் போன்றில்லையானுல் அதற்கு நானு பொறுப்பு?"

"அனிச்சம்பூவே! நீ சொல்!......நீ மட்டும் எப்படி உரைக்கப் போகிருய்! என் உடலின் மென்மையைப் பற்றித்தான் உனக்கு நெடுநாளைய பொருமையாயிற்றே!"

"முல்லையே! நீ அறிவாயா என் தலைவரைரைப் பற்றி? நீ என் பற்களைப் போன்றில்லையே என்று கோபம்! அதற்கு நானென்ன செய்வேன்!"

"மலரில் ஊறும் மதுவே! நீ சொல் என் தலைவர் எப்போது வருவர்? என் உமிழ்நீரின்மீது உனக்குப் பொருமை! நீ அப்படி இனிக்கவில்லையானுல் அதற்கு நானென்ன செய்வேன்?"

"தாழைமடலே நீ? என் கூந்தல்மீது உனக்குக் கண்!

"ஆ! ஒருவராவது பதில் கூறமாட்டேனென்கிறீர்களே! உங்களுக்கெல்லாம் என்மீது அவ்வளவு பொருமையா? சீ! கவிஞர்களும் உங்களைப் போய் வருணிக்கிருர்களே?"

இதற்கிடையில் நெடுந்தூரம் சென்றிருந்த தலைவன் திரும்பி வந்து தலைவியை இல்லத்தில் காணுது சோலையையடைந்து தலைவி கூறியவற்றையெல்லாம் மறைந்திருந்து கேட்கிருன். இதைத் தோழி மட்டும் கண்டுகொண்டு, தலைவியைத் திகைப்பிலாழ்த்த வேண்டுமென எண்ணித்தான் மறைவிடம் சென்றுவிடுகிருள்!

தலைவியை இதற்கு மேலும் துயரத்திலாழ்த்த விரும்பாத தலைவன் திடீரென தலைவியின் பின்புரமாக சென்று அவளது கண்களை தன் கைகளால் மூடுகிருன். தலைவியும் உடன், தன் கண்களை மூடுவது தலைவன்தானென உணர்ச்சியின்மூலம் உணர்ந்துகொண்டு "கண்ணுளா...வந்துவிட்டீர்களா? என்று மகிழ்ச்சியால் சொற்கள் அவள் வாயிலிருந்து நிணறி வர தலைவனை மலர்க்கொடி கொம்பைத் தழுவுவதுபோல் தழுவுகிருள். தலைவனும் அவளை வாழியணைத்து முத்தமிட்டு கொஞ்சுகிருன்.

"அன்பே!"

"கண்ணுளா!"

"என்னுடைய இந்த மிகச் சிறிய கால பிரிவைக்கூடத் தாங்க முடியாமல் துயருற்று இயற்கையின் மீதெல்லாம் இப்படிக் கோபிக்கலாமா? கூடாது கண்ணே! அவைகளெல்லாம் கவிஞர்களின், எண்ண ஊற்றுக்கு காரணமாக அமைவன!

உடன் தலைவியும் அவைகளிடத்தெல்லாம் மன்னிப்புக் கோருபவள்போல் பார்க்கிருள்!...... தென்றல் மெல்ல வீசுகிறது!... மலர்கள் மணம் பரப்பின! வண்டுகள் மலர்களை மொய்த்தன!... தலைவன் தலைவியின் கரங்களைப் பற்றி அவளை அணைத்தான்...!

—அன்பு

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

ஐயர் பட்டத்தின் வரலாறு

பா. இராசேந்திரன்
கோயமுத்தூர்

இடைக்கால நூற்றாண்டுகளில் தமிழக மன்னர்களின் அவையிலே அங்கம் வகித்த 'முத்தரையர்' 'பழவேட்டரையர்' போன்றோரின் வழிவந்தோரே இன்றைய "ஐயர்" என்ற வகுப்பினர் ('பார்ப்பனர்') எனக் கொள்ளலாமா? விளக்குவீராக.

முத்தரையர், பழவேட்டரையர் தமிழக மன்னர் அவையிலே அங்கம் வகிப்பவர் அல்ல. சிற்றரசர்கள் வேளிர் போன்ற மிகப் பழங்குடி மக்கள். ஒவ்வொரு சமயம் அவர்கள் ஆற்றல் வாய்ந்த குடியரசராகவும், சில சமயம் பெரு மன்னர் படைத்தலைவர், மாகாணத் தலைவராகவும் இருந்ததுண்டு. பெரும் சோழரிடம் படைத் தலைவராயிருந்த வாண்டையர்கோன் கருணாகரன் இத்தகையவனே. முத்தரையரைப் பற்றிய மட்டில், சங்க காலத்துக்குப் பின்னும் பெருஞ் சோழர் எழுச்சிக்கு முன்னும் அவர்கள் தஞ்சை உட்பட்ட சோழ நாட்டின் பெரும் பகுதியையே கைப்பற்றி ஆண்டிருந்தார்கள். 9-ம் நூற்றாண்டின் இறுதியில் அவர்களிடமிருந்து தஞ்சையைக் கைக்கொண்ட பின்பே சோழர் மீண்டும் வளர முடிந்தது. இன்றுகூட முத்தரையர் குடியினர் தமிழுலகின் பல வகுப்பினரிடையே ஒரு வகுப்பினராய், முத்தரசர் என்பதைச் சாதி பட்டமாகக்கொண்டு விளங்குகிறார்கள். ஆகவே ஐயர் என்ற சொல்லுக்கும் 'அரையர்' 'அரசர்' என்று முடியும் இக் குடிகளுக்கும் கேள்வி கேட்பவர் ஐயப்படும் எத்தகைய தொடர்பும் இருப்பதாகத் தெரியவரவில்லை.

ஐயர் என்பது இன்று தமிழகத்தில் ஒரு வகுப்பினரையும் ஐயங்கார் இன்னொரு வகுப்பினரையும் குறிக்கிறது. பிந்தியது உண்மையில் ஐயன் என்பதன் தெலுங்கு வடிவுடன் தமிழில் 'அவர்கள்' 'ஆர்' போன்ற தெலுங்கு அடை வெளியாகிய 'காரு' இணைந்த வடிவமே, தெலுங்கில் இறுதி 'ன' கரம் அதன் மூல திராவிட வடிவமாகிய மூச்சொலி உயிரே யாதலால் அது எளிதில் 'ங' கரமாகிறது.

'ஐ' என்ற சொல் உரியியலில் தொல்காப்பியரால் வியப்புற, மதிப்புக்குரிய பகுதியாகக் கொள்ளப்படுகிறது. அதுவே சங்க இலக்கியத்தில் 'தலைவன்' 'தாய்' 'தந்தை' 'முன்னோர்' என்ற பொருள்களிலும் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 'ஐயா' என்பது பொதுவாக எல்லாரிடமுமே மரியாதை விளியாகவும், 'தந்தை', தாயைப்பெற்ற பாட்டன், பாட்டன் என்ற பொருளும் பேச்சு வழக்கில் தருகிறது. 'ஆய்க' 'ஆயன்' 'ஆயா' 'ஆயாள்', 'ஆயான்' 'ஆசான்' முதலிய வடிவங்களும் இலக்கிய வழக்கிலும் பொது வழக்கிலும் 'தலைவன்' 'தாய்', மூத்தோன், பேராசிரியன், பண்டிதன் என்ற பொருள்கள் பெற்றுள்ளன.

பொதுவாக மதிப்புடையவரைக் குறித்த 'ஐயர்' அவ்வக் காலங்களின் பண்பாடு, சமுதாய, அரசியல், சமயத் தொடர்புகளுக்கேற்பப் பல திறத்தாருக்கும் உரிய சொல்லா[illegible] குறித்த பெயராக இதனைப் பதினூறும் நூற்றாண்டுக்கு முன் காட்ட முடியாது. தொடக்கத்தில் முனிவர் என்ற பொருள் இருந்ததை ஒட்டி, தேவார காலங்களிலிருந்து (7-9 நூற்றாண்டுகளிலிருந்து) தமிழகத்திலும் வீர சைவ இயக்க காளிலிருந்து (12-ம் நூற்றாண்டிலிருந்து) கன்னட நாட்டில் 'ஐயா' என்ற சொல் சைவ, வீர சைவப் பெரியாரைப் பொதுவாகவும், சிவன் கோயில் பூசை செய்யும் குருக்கள், தேவாரம் பாடும் ஓதுவார், சைவ வீர சைவக் குருக்கள், ஆகியவரை முன்னிலையில் விளிக்கவும் படர்க்கையில் குறிக்கவும் வழங்கிற்று. இன்றளவும் இவ் வழக்குகளைச் சைவ, வீர சைவ உலகில் காணலாம்.

ஐயர் மட்டுமின்றி, முதலியார், படையாட்சி, பிள்ளை, அம்பலம் முதலிய இன்றைய தமிழகச் சாதிப் பட்டங்கள் உண்மையில் அரசியல் காரணமாகப் பல தனி மனிதருக்கு முதலில் கொடுக்கப்பட்ட நன் மதிப்புப் பட்டங்களே. பிரிட்டிஷ் ஆட்சியில் இராய்பகதூர், இராவ் பகதூர், திவான்பகதூர் ஆகியவையும், ஆங்கில நாட்டில் கோமகன் (Duke), பெருமான் (Lord), கோமான் (Earl) போன்ற குடிப் பட்டங்களும், படைத் துறையில் படை முதல்வர் (Commander) தலைவன் (General), மீகான் (Captain) துணைவன் (Lieutenant) போன்றவையும் ஒத்த பதங்களே இவைகள். பதினாறும் நூற்றாண்டிலிருந்தே இவை படிப்படியாகக் குடிப் பெயராகவும், குலப் பெயராகவும், இறுதியில் சாதிப் பெயராகவும் மாறி, தமிழகத்தில் முன்பு இல்லாத புதிய சாதிகளுக்கு வழி வகுத்தன.

அரசியல் பட்டங்களில் முதலி, படையாட்சி முதலியவை படைத்துறைப் பட்டங்கள் என்பது தெளிவு. விசய நகர, மதுரை நாயக்கர் காலத்தில் தளவாய் அரியநாத முதலியாருக்கே 'முதலி' என்ற சிறப்புப் பட்டமும், தளவாய், என்ற பதவி பட்டமும் உரியதாயிருந்தது. பின் முதலியார் அவர் உறவினர் அனைவருக்கும், தளவாய் முதலியார், அவர் நேர் குடி மரபினருக்கும், மேடை தளவாய் முதலியார் அவர் மூத்தகுடி மரபுக்கும் உரியனவாயின. இவ் வழக்குகள் இன்றளவும் நிலவுகின்றன.

படைத்துறை ஷராப் பட்டங்களில், வாணிகம் காரணமாக செட்டி, ரெட்டி, காவிதி ஆகியவை இலக்கிய வழக்குடையன. செட்டி மட்டுமே இன்று சாதிப் பெயராய்த் தமிழகத்திலும் தெலுங்கு கன்னட, மராத்தி குசராத்தி நாடுகளிலும் வழங்குகின்றன. அரசவைக் கணக்கர், கணி, கணக்கர், கர்ணம், கருணிகர், காயஸ்தர் என வழங்கலாயினர். இவையும் தமிழக முதல் வங்கம் வரை சாதிப் பெயர்களாகியுள்ளன. படைத்துறைசாரா உயர் அரசியல் குடியுரிமைப் பட்டங்கள் தம்பி, தங்கச்சி, பிள்ளை, மாப்பிள்ளை, ஐயர் போன்றவைகளே. மலையாள நாட்டில் தம்பி தங்கச்சி அரசர் குடி பிறந்தவர்களுக்கும், பிள்ளை, மாப்பிள்ளை அந்த மதிப்புக்கு உயர்த்தப்பட்ட உள் நாட்டு, வெளிநாட்டுக் குடிகளுக்கும் தரப்பட்டன. தொழில் திறமை, கல்வி கலைத் திறமை காரணமாக, அரசராலேயே குருவாகவும், நாட்டு விருந்தினராகவும் சிறப்புற நடத்தப்பட்டவர்கள் அல்லது வரவழைக்கப்பட்டவர்களுக்கே 'ஐயர்' என்று பட்டது.

தமிழரசர் பிடித்து ஆண்ட பகுதி மலையாளக் கரையும் தென்பாண்டி (திருவாங்கூர், குமரி, திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கிய) நாடே. ஐயர் என்ற பட்டம் இங்கேதான் தொடங்கிற்று. மலையாள நாட்டிலும் மேற்குக் கரைக் கன்னட நாட்டிலும் அரசருக்கும் மேம்பட்ட மதிப்புடைய குடிகள் நடிகர் ('நம்பி,' நம்பியார்கள்), நாடக ஆசிரியர்கள் ('நம்பி திரு' அதாவது நம்பூதிரிகள்) பெருங் கவிஞர் ('நம்பி திருப்பாடு' அதாவது நம்பூதிரிப்பாடு) ஆகியவர்களும் கோயில் குருக்கள் (போற்றிகள்) ஆகியவர்களுமே. ஆனால் உயர்தர மருத்துவர், நெசவாளர், பட்டு நெசவாளர், தமிழகத்தில் புதிதாக 9-ம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைந்த அணி நூல் (அலங்கார சாஸ்திர) வித்பன்னர் ஆகியோர் அயலிடங்களிலிருந்து தருவிக்கப்பட்டு, 'ஐயர்' என மதிப்புப் பெற்றனர். இக்குடியினரில், மற்றத் தொழிலாளர் இடைக் காலத்தில் கெட்டழிந்து போக, அணி நூலாராய்ச்சியாளரே பிற்கால அரசராலும் மானியங்கள், வேத பாடசாலைகள் மூலம் புதிய அக்கிரகார மரபினராக வளம்பெற்றனர். இவர்களே வடதிசைப் பார்ப்பன மரபினரின் வழி வந்தவர்கள். 'ஐயர்' என்றும், 'ஐயங்கார்' என்றும் **தமிழகத்தில் மட்டும்** வழங்குபவர்கள்.

தமிழகத்திலிருந்து குடியேறியவரன்றி மலையாள கன்னட நாடுகளில் இன்னும் ஐயர், ஐயங்கார் கிடையாது. தெலுங்கு நாட்டில் ஐயர் கிடையாது. தென்னாட்டுக்கு வெளியே பிராமணர்க்கு வழங்கும் பட்டங்கள் 'பண்டிதர்', 'பண்ட்', 'பண்டா' ஆகியவையே. இவை உண்மையில் தமிழகத்தில் இன்னும் மருத்துவருக்கும் வழங்கும் 'பண்டிதர்', கோயில் குருக்கள், கோயில் திருப்பணியாளர்களுக்கு வழங்கும் 'பண்டாரம்' ஆகியவற்றுடன் ஒத்த பழைய சொல்லே யாகும். கோயில் குருக்களுக்கும் தமிழ்த் துறவிக்கும் வழங்கிய இத் தொடர்களே (ஆண்டி, பண்டாரம்) தலைவன், கடவுள் (ஆண்டை, ஆண்டகை, ஆண்டவன், பண்டாரம்) என வழங்குதல் காணலாம். பண்டாரம் உண்மையில் படி, பட்டம் (பி. ஏ., எம். ஏ. போன்றன) பட்டி (பட்டி மன்றம், பட்டதாரிகள் கூடிப் பேசும் இடம்

பட்டயம் (படித்தவர், பட்டம்பெற்றவர்க்கு உரிய பத்திரம்) ஆகிய சொற்களுடன் தொடர்புடைய பழந் தமிழ்ச் சொல்லேயாகும்.

— 9ம் பக்கம் —

மலிவுப் பதிப்பு பொங்கல் வெளியீடு

தன்னேரிலாத தமிழ் இலக்கியம்

புறநானூறு

மூலமும் தெளிவான உரையும்

அறிஞர் பலரின் கூட்டு முயற்சி

விலை ரூ. 2-00

★

விவரங்களுக்கு:

அருணா பப்ளிகேஷன்ஸ்,

தியாகராயநகரம் ; : சென்னை-17.

அடுத்த வெளியீடு: கலிங்கத்துப் பரணி ரூ. 1-50

அவள்

கடும் வெயிலில் சிக்கிய தாராகக் கசிந்து கிடந்தது என் மனம். மனித நெஞ்சம் எதிர்பாராத சம்பவங்களால் பின்னப்படும்போது எப்படியெல்லாம் நெளிக்கப்பட்டு! விடுகிறது. பாத்திரங்கள் கீழே விழுந்து வளைந்தால் நெளிவை மாற்றிக்கொள்ளலாம். ஆனால் நெளிந்த நெஞ்சை நிமிர்த்த முடியுமா! என்றைக்கோ கீறல் போடப்பட்ட இதயத்தில் மறுபடியும் வழவழப்பு ஏற்பட இயலுமா! குழிக்குள்ளே போடப்பட்ட வெடிமருந்து இரும்புத்துண்டால் நசுக்கப்படுவது போல வெடித்தது என் எண்ணங்கள்.

நெஞ்சிலே பாரம் அதிகரிக்கும் போதெல்லாம் நண்பர்களைச் சுமைதாங்கிகளாக்கி பாரத்தைக் குறைப்பது எனக்கு வாடிக்கை. சோகச் சம்பவங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள அமைக்கப்பட்ட ஒரு ஐக்கியம்தான் நட்பு என்கிற கருத்துக் கொண்டவன் நான். என்னைப் பொறுத்தவரையில் எத்தனையோ பேரின் சோகச் சிக்கல் வரலாறுகளைப் பொறுமையோடு கேட்டிருக்கிறேன். நான் இப்போது யாரிடம் என்னுடைய குறையைச் சொல்லுவது! மனம் விட்டுப் பழகும் நண்பர்களைவிட்டு ஓடிவந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டனவே. இதய பாரத்தைத் தணிப்பதற்காக புதிய நண்பர்களை உருவாக்க எனக்கு விருப்பமில்லை. நெஞ்சிலே புதைக்கப்பட்டுவிட்ட அந்த நினைவை மீண்டும் மீண்டும் கிளறி என்ன பயன்!

எங்கோ வெகு தூரத்துக்கு எனது சொந்த ஊரிலிருந்து விரட்டப்பட்டுவிட்டேன். தருமராசன் என்று தேன் மணக்கும் சொல்லிலே நண்பர்கள் என்னைக் கூப்பிடும் மதுரை, நான் பிறந்த ஊர். சொந்த ஊரிலிருந்து பலர் வறுமையால் வேற்றூருக்கு விரட்டப்படுவது சகசம். என்னைப் பொறுத்த மட்டிலும் என்னை நானே விரட்டிக்கொண்டேன். எனக்கு வாழ்க்கை வசதி இருந்தது, ஆயினும் நான் டெல்லியை நோக்கி ஓடிவந்தேன், அலுவலக மொன்றில் பணி புரிவதற்காக.

வெட்டி விழ்த்தும் பட்டாக்கத்திக்கு வெல்வெட் உறை போடப்படுவதுண்டல்லவா. அதுபோல நான் கற்பனை செய்துவந்த காதலின், திரை நீங்கியபோது அங்கே கத்தியைக் கண்டேன். அதுவே என்னைப் பார்த்துக் கேலி செய்தது. நான் என்னால் விரட்டப்பட்டேன். மூன்று ஆண்டுகள் எப்படியோ நகர்ந்துவிட்டன. எனக்குப் பிடித்தமில்லாத, என்னால் பின்பற்ற முடியாத நாகரிக, கலாசாரங்களுககுஊடே நான் சிக்கித் தவிக்கிறேன். இருந்தாலும் சொந்த ஊருக்குத் திரும்பிச்செல்ல வேண்டுமென்கிற நினைவு மாத்திரம் எழும்பவேயில்லை!

நான் எப்போதுமே சிறிய காரியங்களைப் பெரிதுபடுத்தி மனதை வாட்டிக்கொள்வேன். ஆகவே நான் சுசீலாவின் உதடுகளைக் கிழித்துக் கிளம்பும் சின்னஞ்சிறு சிரிப்பு ஒன்றை வைத்து பெரும் காதல் மாளிகையே உருவாக்க நினைத்தேன். ஆனால் குச்சியை உபயோகித்துக் காதல் மாளிகைக்குத் தளம் அமைக்கமுடியாதென்கிற தத்துவத்தை உணர்ந்துகொள்ள என் வாழ்வையே கோணலாக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று!

எத்தனையோ பேர் அனுபவத்தால் வளைக்கப்படாமலே இயற்கையில் நிம்மதியான பாதையில் செல்லும் பக்குவத்தைப் பெற்றுவிடுகிறார்களே! என் அருமை நண்பன் மஸ்தானிடம் இந்தப் பண்பைக் கண்டேன். அவன் அடிக்கடி சொல்லுவான், ராசா, சிரிப்புக்குப் பதில் சிரிப்பைக் கொடு, பார்வையை நோக்கி பார்வையை வீசு, ஆனால் உன் இதயத்தை மட்டும் எந்த சக்திக்கும் கொடுத்து விடாதே - இப்படி எவ்வளவோ சொல்லுவான். ஆயினும் சுசீலாவின் ஒரு சிரிப்பிலே என் இதயம் தேன் ஊற்றையும் தென்றல் காற்றையும் கண்டது. அவள் சிரித்துக்கொண்டே இருந்தாள். நான் அடிமையாகிக் கொண்டே இருந்தேன். இரண்டு கரங்களும் இணைந்தாலல்லவா சப்தம் எழும்பும்! இது மட்டும் எங்களுக்குள் நடக்கவேயில்லை. இருவரும் தனித்தனியே நின்றோம். அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள். நானோ என் நெஞ்சிலே வேரூன்ற வைத்திருந்த காதல் மரத்தைப் பார்த்துச் சிரித்தேன். அந்த மரத்திலே கோடரி வெட்டு விழுகும் வரைக்கும் எனக்கு மாத்திரமல்ல சுசீலாவுக்கும் நானே ராஜாவென நினைத்திருந்தேன்.

★

சுசீலா, பள்ளியிலே அப்போது பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். தினந்தோறும் வீட்டிலிருந்து பஸ்ஸில் செல்வது வழக்கம். அப்படியிருக்கும் போதுதான் ஒரு நாள் அவள் சென்ற காரிலே நானும் போய்க்கொண்டிருந்தேன். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் நினைத்தால் மனித வாழ்க்கையை எப்படியும் மாற்றிவிட இயலுமல்லவா! அன்று அவளின் பனிக்கட்டிப் பல்வரிசை விரிந்து சிரிப்பது தெரிந்தது. என்னைப் பார்த்துச் சிரிப்பதாகவே தோன்றியது. அந்த ஒரு சிரிப்புத்தான் தினந்தோறும் அவள் பின்னால் என்னைப் பிடித்திழுத்துச் சென்றது. பையப்பைய என் மனம் அவளை நோக்கி நகர்ந்தது. என் நினைவுகள் அவளையே வட்டமிடத் துவங்கின. காலம் செல்லச்செல்ல அவளைத் தவிர வேறு நினைவே எனக்கில்லையென்கிற நிலை ஏற்பட்டுவிட்டது.

நண்பன் மஸ்தானின் தத்துவத்துக்கு மாறாக நான் என் இதயத்தையே அவளுக்குக் கொடுத்துவிட்டேன். அதை அவள் ஏற்றுக்கொள்வாளா- இதைப் பற்றிச் சிந்திக்க எனக்கு நேரமில்லை. அவள் ஏற்றுக்கொண்டுவிட்டதாகவே அந்தச் சிரிப்புகளுக்கு அர்த்தம் செய்துகொண்டேன்.

காலையும் மாலையும் காவலாளி போல சுசீலாவைப் பின்தொடர்ந்தேன். அவள் வாடிக்கையாக சிரிப்பைப் பரிசாகத் தந்து வந்தாள். ஒரு நாள் மஸ்தானை என்னுடன் அழைத்துச்சென்றேன், என்னையும் சுசீலாவையும் பார்த்து அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக! ஒரு விளையாட்டுச் சாமான் இருந்தால் எல்லாப் பிள்ளைகளையும் கூட்டிக் காண்பிப்பது குழந்தைப் பண்பு. காதலனும் அப்படித்தானாகிறான். தன்னால் பிரியமாக நேசிக்கப்படும் பெண்ணை நண்பர்களிடமெல்லாம் காதலியெனக் காட்டிக்கொள்வதிலே வாலிப மனம் ஏனோ பெருமைப்படுகிறது. எனக்கு நெருங்கிய நண்பர்களுக்கெல்லாம் சுசீலாவை தூரத்திலிருந்தே காண்பித்திருக்கிகிறன்.

மஸ்தான், இன்று என் இதய ராணியைப் பார்த்தாயே, உன் அபிப்பிராயம் என்ன-ஏதோ நினைவுகளுக்கிடையே சிக்கியிருந்த அவனைத் திரும்பத் திரும்பக் கேட்டேன். என் உயிர் நண்பா, தருமராசா நீயும் சுசீலாவும் சந்திக்கமுடியாத செங்குத்துக் கோடுகள்...!

அப்படி மட்டும் சொல்லாதே மஸ்தான். என் உயிர் நரம்புகள் ஒவ்வொன்றையும் முறுக்கேற்றிக் கொண்டிருக்கும் அவளை நான் எப்படியும் அடைந்தே தீரவேண்டும். எனக்கு நீ வழி கூறு, விழிகளைப் பிடுங்கியெறிய மட்டும் சொல்லாதே வாழ்க்கைக் கடலில் சுசீலாவின் சிரிப்பாகிய தும்பு தானடா எனக்கு ஆதாரம்.

அதற்கு அவன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான். அது எதிர்காலத்தில் நடந்தேவிட்டது என்பதில் தான் அவனது காதல் ஆராய்ச்சி நன்றாகத் தெரிகிறது. "வாழ்க்கைக் கடலைக் கடக்கத் துரும்பு போதாதடா ராசா, கப்பல் வேண்டும். காதலுக்கு நீ ஆடுகிறாய், அது தவறு. நீ, காதலை ஆட்டிவைப்பவனாக மாறவேண்டும். இந்த இரண்டாவது முறையைத்தான் சுசீலா பின்பற்றுகிறாள். சுசீலா சிரித்தவுடன் நீ பைத்தியக்காரனாகி விடுகிறாய். அவள் துடிப்பை விரும்புகிறாள். நீயோ அமைதியான பித்தனை போல உட்கார்ந்திருக்கிறாய். ஆடாத பொம்மையை சுறுசுறுப்பான குழந்தைவிரும்பாது என்கிற விவரம் உனக்குத் தெரியாதா! அரசியல் வாதியும் காதலனும் ஓரளவாது சூழ்ச்சியைப்பயன்படுத்தா விட்டால் நிச்சயமாக வெற்றிபெறவே முடியாது!

மஸ்தானின் வார்த்தைகளின் படி என்னால் நடக்கவே முடியவில்லை. காதல் என்பது பரிசோதனைச் சாலையில் அமிலங்களைக் கலப்பது போல. ஒரு அமிலத்துடன் இன்னொன்றைக் கலந்தால் புதியகுணங்கள் உண்டாகின்றன அல்லவா. அதுமாதிரியே என் நெஞ்சோடு சுசீலாவின் சிறிப்பைக் கலந்தபோது என் குணங்களிலே புதியமாறுதல்கள். எவ்வளவு அதிகமாக முன்பெல்லாம் பேசிவந்தேனோ அந்தஅளவுக்கு ஊமையாகிவிட்டேன். பெண்களைக் கண்டால் கிண்டல் வார்த்தைகளைத் தொடுக்கும் நான் சுசீலாவைப் பார்த்தால் மாத்திரம் பதுமையாகி விடுகிறேன். இதனால் தன் காதலை விசித்திரமானதெனச் சொல்லுகிறார்களோ! தனிமையை நான் பெரிதும் விரும்பத் தொடங்கினேன். அப்போது தானே நினைத்த ரூபத்திலெல்லாம் சுசீலாவைப் பற்றிச் சிந்தனை செய்ய முடிகிறது.

சுசீலா, என் மனத்திலே உயிராக உடலாகச் சிரித்தாள். வானத்திலே நிலவாக நட்சத்திரமாகச் சிரித்தாள். கவினுறு சோலையிலே பூவாக புள்ளிமானாகச் சிரித்தாள். காட்டிலே கரும்பாக கனியாகச் சிரித்தாள். ஒவ்வொரு சிரிப்பாலும் என் நெஞ்சை உரித்தாள் எனச் சொல்லுவதே பொருந்தும்.

ஒருநாள் எப்படியோ எனக்குத் துணிவு பிறந்துவிட்டதென்றே கூற வேண்டும். இல்லாவிட்டால் தைரியமாக "உன் பெயரென்ன" வெனக் கேட்க முடியுமா...

அப்போது அவளது வலைந்த உதடுகளில் சிரிப்பைக் குவித்தாள் "சுசீலா"

— 8ம் பக்கம் —

பி. எஸ். மணியன், பி. ஏ.

அத்திப் பழம்

- 7 -

பள்ளிக்கூடத்துத் திண்ணைக்குப் போவதற்கு முன் வழியில் கண்ட இரண்டொருவர் "என்ன தம்பி எப்போது வந்தாய்? நலந்தானே" என்று கேட்டுக்கொண்டே போயினர். ஆமாம். மாலையில்" என்று அவர்களுக்கு ஏதாவது சொல்லியவாறு ஞானசம்பந்தன் எழிலனுடன் திண்ணையைச் சென்றடைந்தான்.

அந்தப் பள்ளிக்கூடத்திண்ணைக்குப் பேசும் ஆற்றல் எப்படியேனும் கிடைக்குமானால் அது எத்தனையோ வரலாறுகளைச் சொல்லும் வாய்ப்புடையதாக இருக்கும். எந்த வரலாற்றையும் சொல்லாமற் போனாலும் ஞானசம்பந்தனும் எழிலனும் அங்கு உட்கார்ந்து பேசியது விளையாடியது இதையெல்லாமாவது சொன்னாலே பெரிய கதையாகி விடும். இன்று நேற்று அந்தத் திண்ணை அவர்களுக்கு இருந்து பேசும் இருக்கையாக இருக்கின்றது. சின்னப்பிள்ளைகளாக இருந்தபோது பிறர் அங்கே பேசுவதை இவர்கள் மூலைக்கொருவராக நின்று கேட்டுக்கொண்டிருப்பார்கள். படிப்படியாக இவர்களே அங்கே உட்கார்ந்து பேசத் தொடங்கினர்கள். பகல் என்று இல்லை; இரவு என்று இல்லை அப்படி அந்த இடம் அவர்களுக்குப் பயன் பட்டது. அந்த இடம் இல்லை எனில் அடுத்தது குளத்தங்கரையில் இருந்த அரசமரம்தான்.

எத்தனையோ நாட்கள் அவர்கள் இருவரும் அந்தத் திண்ணையின்மீது உட்கார்ந்து பேசிச் சலித்துப்போன பின்னர் ஏழெட்டு பச்சிலைகளைப் பறித்துக்கொண்டுவந்து குறுக்கும் நெடுக்கும் கோடுகளைக் கிழித்து வைத்துக்கொண்டு 'ஆடு புலி' ஆட்டம் ஆடியிருக்கின்றார்கள்.

பள்ளிக்கூடம் இல்லாத வேளைகளில் இப்படி வருவார் போவார்க்கு அந்தத் திண்ணை ஒரு புகலாக விளங்கியது. மாத்தூர் பள்ளிக்கூடத்துத் திண்ணை மட்டும்தான் அப்படி என்று இல்லை. எங்கெங்கே திண்ணை

இருக்கின்றனவோ அங்கெல்லாம் இப்படித்தான் அது பயன் படுகின்றது. பழங்கால அமைப்பாக இருந்தால் திண்ணை இந்தக் காலத்தில் பொது இடங்களில் பஸ் நிலையங்களில், பூங்காக்களில் வந்து தங்குகின்றவர்களுக்கு என்றுதான் அழகான பெஞ்சுகளைப் போட்டு வைத்திருக்கின்றார்கள். ஆனால் அவையெல்லாம் நன்மைக்குப் பயன் படுவதை விடத் திமைக்கு மிகுதியாகப் பயன் படுவதைத்தான் நாள்தோறும் நாடெங்கும் காணுகின்றோம்.

மா.கி.தசரதன் எம்.ஏ.

இந்தப் பள்ளிக்கூடத்துத் திண்ணை அப்படியெல்லாம் வம்பும் தும்பும் பேசி வாய்ச்சண்டை வலுச் சண்டைக்கு இடம் தருவதில்லை. அந்தத் திண்ணையின் விளிம்பில் மழமழவென்று தேய்ந்து கிடந்த கடப்பைக் கல்லைத் தட்டிவிட்டு சுவரில் சாய்ந்து காலை நீட்டி எதிர் எதிர் திண்ணைகளில் உட்கார்ந்து கொண்டபின் ஞானசம்பந்தனும் எழிலனும் எதை எதைப்பற்றியெல்லாமோ பேசினர், யார் யாரைப்பற்றியெல்லாமோ பேசினர், எது எதுவோ பேசினர். நெடு நாட்களாகக் காணு திருந்த கடனையெல்லாம் ஒரு நாளில் தீர்த்து விடுகின்றவர்களைப் போல் எல்லாவற்றையும்பற்றிப் பேசினர்.

எழிலன் கல்லூரி வாழ்க்கையைப்பற்றி என்னவெல்லாமோ கேட்டான். ஞானசம்பந்தனும் அவன் கேட்டதற்கெல்லாம் என்னவெல்லாமோ சொன்னான்.

"பாடங்கள் புரிகின்றனவா உனக்கு?" என்று கேட்டான் எழிலன்.

"ஊம்..." என்று நீட்டினான் ஞானசம்பந்தன்.

"வகுப்பில் ஆசிரியர் கேள்வி கேட்டால் உடனே பதில் சொல்லுகின்றாயா, இல்லை தரையைப் பார்த்துக்கொண்டிருக்கிறாயா அல்லது ஆந்தை முழிக்கக் கண்டேன் என்று விழி விழி என்று விழிக்கிறாயா?" என்று கேட்டான் எழிலன்.

இதைக் கேட்டதும் ஞானசம்பந்தன் கலகல என நகைத்து "ஐயா பத்தாம் பசலியே அது ஒன்றும் இதோ உட்கார்ந்திருக்கின்றோமே இந்தத் திண்ணைப் பள்ளிக்கூடம் அல்ல, வகுப்பில் ஆசிரியர் வினவி மாணவர்கள் விடை சொல்லுவதற்கு!" என்றான்.

எழிலனுக்கு அவன் சொன்னது ஒன்றும் விளங்கவில்லை.

"அப்படியானால் வகுப்பில் ஆசிரியர் என்ன படித்தாய் என்று கேட்கவேமாட்டாரா? பின் என்னதான் செய்வார்?" என்று கேட்டான்.

"மணி அடித்தவுடன் வருவார். கிடுகிடு என்று முடுக்கிவிட்ட எந்திரம்போல எடுத்த பொருளைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார். மணி அடித்ததும் வந்ததைப்போல போய்விடுவார். பிறகு அடுத்த வகுப்பு வேறுபாடம்."

"கேட்க மனம் இல்லாவிட்டால் மாணவர்களுக்கு எப்படி இருக்கும்."

"இருப்பதென்ன பேசாமல் கிடக்கவேண்டியதுதான். எல்லா ஆசிரியர்களும் அப்படியல்ல சிலர் அந்த எந்திர வாழ்க்கையிலும் ஏதாவது வேடிக்கை

கலந்து சொல்லி மாணவர்களின் மனங்கொள்ள பாடங்களைச் சொல்லித் தருகின்றவர்கள் இருக்கின்றார்கள். அப்படிப் பட்டவர்களுக்குத்தான் மாணவர் உலகில் மதிப்பு இருக்கிறது. மற்றவர்களிடம் ஒரு வேளை அச்சம் இருக்கும். ஆனால் அன்பு இருப்பதில்லை'' என்று ஞானசம்பந்தன் தன் கல்லூரி அனுபவங்களை எடுத்துச் சொன்னான்.

''அப்படியானால் கல்லூரியில் படிப்பதும் படிப்பில் கவனம் செலுத்தாததும் மாணவன் விருப்பம்தான் என்று சொல்லு'' என்று கேட்டான் எழிலன்.

''ஒருவகையில் அது உண்மைதான்'' என்றான் ஞானசம்பந்தன்.

''இந்த முறையினால் பிள்ளைகள் சீக்கிரம் படிப்பில் அக்கறை இழந்துவிடுவார்களே. தூண்டினால்தானே விளக்கு எரியும். அடியாத மாடு எங்காவது படியுமா?'' என்று எழிலன் சான்று கள் தேடினான்.

''அடேயப்பா உனக்கு என்ன சொல்லுவது. இப்படித்தான் கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இதுவரையில் கெட்டுப் போகின்றவர்கள்தான் கெடுகின்றார்கள். சீர்படுகின்றவர்கள் சீர்படுகின்றார்கள்.'' என்றான் ஞானசம்பந்தன்.

ஞானசம்பந்தன் சொன்னதைப்போல கல்லூரிகளில் இந்தமுறைதான் இருந்து வருகின்றது. இந்த முறையில் நன்றாகப் படித்து முன்னேறுகின்றவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். என்றாலும் இது மந்தை மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிக்கொண்டு போவதைப் போலத்தான்.

மாடுகளை மந்தைகளாக ஓட்டிக் கொண்டுபோவதில் மேய்க்கும் ஆள் நிரம்பவேண்டியதில்லை என்பது உண்மைதான். ஆனால் அதனால் மாடுகளுக்கு வேண்டிய உணவு சரிவரக் கிடைக்கின்றதா என்பதைக் கண்டுபிடிக்க முடியாது.

நின்று செரிக்கும் தீனியிலேயே மந்தையில் இருக்கும் மாடுகளுக்கு உணவு சரியாகக் கிடைப்பதில்லை என்னும்போது அறிந்து உணரவேண்டிய அறிவு தேடும் பணியில் மந்தை மந்தையாக மாணவர்களை அடைத்து வைத்துக் கொண்டிருப்பது எப்படிப் பலன் தர இயலும்?

அதனால்தான் இந்தக் காலத்திலும் சரி ஞானசம்பந்தன் கல்லூரியில் கற்ற காலத்திலும் சரி உயர்நிலைப்பள்ளிகளைவிட கல்லூரிகளில் ஏமாற்றுகின்ற மாணவர்கள் மிகுதியாக இருக்கின்ற நிலை உள்ளது. தொடக்கப் பள்ளியில் கட்டுரை எழுதாமல், செய்யுள் ஒப்புவிக்காமல், நிலப்படம் போடாமல், வீட்டுக்கணக்கு போடாமல் ஆசிரியரை ஏமாற்றுகின்ற மாணவர்கள் இல்லை என்றே சொல்லலாம். உயர்நிலைப்பள்ளிகளில் இரண்டொருவர் இருப்பர். கல்லூரிகளில் இந்தத் தொகை இன்னும் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். கல்வித்துறையில் மாறுதல் செய்கின்றவர்கள் இதனையெல்லாம்தான் கவனித்து மாறுதல்களைச் செய்தல்வேண்டும்.

ஞானசம்பந்தனும் இப்படித்தான் தன் வாழ்க்கையில் படிப்படியாக மாற்றம் பெற்றான். மாத்தூர் தொடக்கப்பள்ளியில் படிக்கின்றபோது அவன் நல்ல மாணவனாகத்தான் இருந்தான். உயர்நிலைப்பள்ளியிலும் பெரும்பாலும் தவறு செய்யாமலே இருந்தான். ஆனால் கல்லூரிக்குப் போனபின் அவன் முதன் முதலில் செய்த இரண்டொரு தவறுகளை யாரும் கண்டுபிடித்ததாகவே தெரியவில்லை.

ஒருநாள் அவன் வகுப்புக்கே போகவில்லை. மறுநாள் 'ஏன் நேற்று வரவில்லை!' என்று யாராவது கேட்டால் என்ன செய்வது என்று நான் நடுங்கிக் கொண்டிருந்தான் ஆனால் எவரும் ஏன் என்று கேட்கவில்லை.

கட்டுரை எழுதாமல் சில நேரங்களில் வாளா இருந்தான். அதனையும் கண்டித்துச் சொல்வார் இல்லை. இப்படியே பல முறை கண்டபின் தான் கல்லூரியில் வகுப்பிற்கு ஒழுங்காகப் போக வேண்டும் என்ற எண்ணத்தையும்விட்டு நினைத்தால் போவதும். நினைத்தால் நின்றுவிடுவதுமாக இருந்தான். அவனுக்குத் துணையாக ஏகாம்பரம் ஒருவன் வந்து சேர்ந்தான்.

ஏகாம்பரம் கல்லூரிக்கு வந்த காரணம் வேறு. கல்லூரியில் படிக்கவேண்டும். பட்டம் பெற வேண்டும். பெற்ற பட்டத்தை மடித்துக் கையில் வைத்துக் கொண்டு அலுவலக வாயிற்படிகளில் நுழைந்து நுழைந்து வெளி வந்து திண்டாட வேண்டும் என்ற நிலையில் இருப்பவன் அல்ல. முன்னோர் தேடிவைத்த செல்வம் அவனுக்கு ஏராளமாக இருந்தது. எப்படியாவது சென்னையில் சில காலம் இருக்க வேண்டும். என்று எண்ணினான். அதற்குக் கல்லூரியில் சேர்ந்து படிக்கின்றேன் என்று சொல்லுவதுதான் சிறந்த வழி என்று கண்டுபிடித்தான். சென்னைப்பட்டினத்தில் அவன் இரண்டு மூன்று கல்லூரிகளில் ஒரே வகுப்பை மாற்றி மாற்றிப் படித்தவன். ஞானசம்பந்தனுக்கு அவனுடன் எப்படியோ பழக்கம் வந்துவிட்டது. அந்தப் பழக்கம் நட்பாகவும் மாறிவிட்டது. ஏதாவது தவறு இழைத்தால் யாராவது கண்டிப்பார்களோ என்று ஞானசம்பந்தனுக்கு இருந்த அச்சத்தையும் போக்கியவன் ஏகாம்பரம்தான்.

'அடே பயந்தாங்கொள்ளி-நான் இங்கே மூன்று ஆண்டுகளாகப் படிக்கின்றேன். அந்தப் பெரிய அனுபவத்தை வைத்துத் தான் சொல்லுகின்றேன். இன்று மாலை வகுப்புக்கு வருகின்ற பேராசிரியர் மாணவர்களைப் பார்த்தே பாடம் சொல்லுவதில்லை. நீ வந்தாயா வரவில்லையா என்பதை அவர் ஏனப்பா பார்க்கப் போகின்றார். நீ வா, நாம் போகலாம் மினர்வாவில் இன்று புதிய படம்'' என்று இவனை அழைத்துக்கொண்டு போவான்.

போகின்ற வழியில் பல கட்டிடங்களைக் காட்டி விளக்கிக் கொண்டே போவான். அப்படி ஒருமுறை ஒரு பெரிய உணவுக் கடையைக் காட்டி என்னென்னவோ சொன்னான். அவன் சொன்னவற்றையெல்லாம் முதலில் ஞானசம்பந்தனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நாளடைவில் அதெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக விளங்கத் தொடங்கியது.

அதைப்பற்றியெல்லாம் ஞானசம்பந்தன் எழிலனிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஏகாம்பரம் என்று தனக்கொரு புதிய நண்பன் ஏற்பட்டதையும் அவன் சொல்லவில்லை. சொன்னால் எழிலன் சும்மா இருக்கமாட்டான் அவனைப்பற்றி ஏதாவது கேட்டுக் கொண்டே இருப்பான். அவனைப் பற்றி எதைச் சொல்லுவது, எதை விடுப்பது; சொன்னால் இவன் என்ன நினைப்பானோ என்று பலவாறு எண்ணியவனாய் அவனைப்பற்றிக் குறிப்பிடாமலே விட்டுவிடுவதுதான் நல்லது என்பதனை உணர்ந்தான்.

''நாளை, மறு நாள் இங்கே இருப்பாய் அல்லவா?'' என்று கேட்டான் எழிலன்.

''இல்லை. காலையே போகின்றேன். என்னமோ வரவேண்டும் என எண்ணினேன், வந்தேன். நாளை போகின்றேன். பின்னர் எப்போதேனும் வருகின்றேன்'' என்றான் ஞானசம்பந்தன்.

பின்னர் சற்று நேரம் அவர்கள் அங்கே ஊர்க்கதை பேசிக் கிடந்தனர். எழுந்து போகலாமா என்று எண்ணிய நேரத்தில் யாரோ நான்கைந்து பேர் அந்தத் திண்ணையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கணவனும் மனைவியும்போல் இருந்தனர். மற்ற இருவரும் சிறுவர்கள்.

''யார் அது?'' என்றான் எழிலன்.

''நாங்கதான்' சாமி'' என்று அந்தக் கணவன் குரல் கொடுத்தான்.

''ஓ நீயா'' என்றான் எழிலன்.

''யாரப்பா, அது?'' என்றான் ஞானசம்பந்தன்.

''இங்கே நம்முடைய ஊர் ஏரியின் மதகு வேலை செய்கின்றவர்கள் வெளியூரிலிருந்து வந்திருக்கின்றார்கள். இத்தனை நாள் எங்காவது படுத்துக்கொள்ளுவார்கள். இன்று என்னமோ இங்கே வந்திருக்கின்றார்கள்'' என்று எழிலன் விளக்கினான்.

''ஆமாம், சாமி அதோ அந்த வேப்பமரத்தடியிலேதான் இது வரை கிடந்தோம். குளிர்தாங்கலை இந்தக் கூறையில் ஒதுங்க வந்தோம்.'' என்று அந்தக் கணவன் சொல்லிவிட்டு, 'இதோ அப்படி மூலையிலே புள்ளைக்களைப் படுக்கவை காற்றுக்கு அடக்கமாக' என்று தன் மனைவிக்குக் கட்டளை பிறப்பித்தான்.

நண்பர்கள் இருவரும் எழுந்து சென்றனர். எழிலனுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு வெளிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்ற ஞானசம்பந்தன் ஏதோ பெயருக்கு உணவு கொண்டு மாடிக்குச் சென்று விட்டான்.

தொடரும்

இந்த ஆண்டு

தென்றல் பொங்கல் மலர்

★ இலக்கியக் களஞ்சியம்!

★ அரசியல் பூங்கொத்து!

★ கலைக் கோபுரம்!

★

விலை ரூ. 2

டிசம்பர் 30-க்குள் முன்பணம் அனுப்பாதவர்களுக்குக் கண்டிப்பாக மலர் அனுப்பப்படமாட்டாது.

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

எனச் சொன்னாள். அந்த ஒரு சொல் லோசையின் இனிமையை பிரபல பாடகர்களின் இசையிலே கூட என்னால் உணர முடியவில்லை. சின்ன இடை நெளிய நடந்தாள். கைவளையல்கள் கானம்கிளப்பின. குயிலின் கூவுதலிலே எவ்வளவோ இனிமை இருப்பதாகக் கவிஞர்கள் சொல்லுகிறார்களே, என் சுசீலாவின் வளையல் கிளப்பிய இசை நயத்துக்கு ஈடு சொல்லமுடியாது திணறியது என் காதல்உள்ளம்.

மண்ணிலே விழுந்து உடைந்து சிதறிவிட்ட முட்டையைப்போல என் நெஞ்சை மாற்றிவிட்டது அன்றொரு நாள் நடந்தநிகழ்சி. பள்ளி முடிந்து வீடு திரும்புவதற்காக சுசீலா நின்று கொண்டிருந்தாள். வழக்கம் போல நான் போனேன். ஆனால் எனக்கு முன்னால் யாரோ ஒருவாலிபன்— சுசீலாவும் அவனும் சேர்ந்து சிரித்த சிரிப்பு என்னைத் தாக்கியது. நாதன்— அதுவே அவன் பெயர். கல்லூரியில் படித்துவரும் மாணவன். எத்தனையோ முறை பல இடங்களில் அவனைச் சந்தித்திருக்கிறேன். அத்தனை தடவைகளும் பாவையர் கூட்டத்தைஅவன் வட்டமிட்டதையே கண்டிருக்கிறேன்.

அவனும் சுசீலாவும்...பறக்கத்தெரியாத கோழிக்குஞ்சுக்குப் பக்கத்திலே காட்டுப்பூனை. என் இருதயச் சுவர்களின் கெட்டியிலே அந்த ஒரே நிமிடத்தில் ஆயிரமாயிரம் வெடிப்புகள்! வான வெளியிலே பறக்கவிட்டு அழகு பார்த்த காதல் புருவின் இறக்கைகள் பிய்ந்தன. நான் வாஞ்சையுடன் வளர்க்க நினைத்த மான் கோர வரிப்புலியின் கொடு நகங்களுக்கிடையே சிக்கிச் சிரித்தது. துடிப்பான விரல்களால் மீட்டப்படும் வீணையிலேதான் இசை முழங்கும், அதிரும். மஸ்தான்சொன்ன தத்துவப்படி நாதன் துடிப்பானவன். நான் தடவநினைத்தேன், ஏமாந்தேன். நாதன் தட்டினான், வெற்றி பெற்றான்.

மாணவன் தவறுசெய்தால் ஆசிரியருக்குக் கண்டிக்கவேண்டிய உரிமை இருபதாகக் கருதினேன். அவளது வாழ்க்கைச் செடி பாம்புப் புற்றைச் சுற்றிப் படருவதைத் தடுக்கவேண்டும். இந்த நல்லெண்ணத்தோடு அவளைத் திருத்த நினைத்தேன்.

"அன்பு சுசீலா, ஊமையாகவே உன்னைத் தொடர்ந்து திரிந்த நான் இன்று பேசுகிறேன்." அவளிடம் நான் இதைச் சொன்ன போது அவள் சிரித்தாள். "நான் உன்மீது உயிரையே வைத்திருக்கிறேன்" என்று சொன்னேன். "நான் எனது உயிரையே அவருக்குக் கொடுத்துவிட்டேனே—" உணர்ச்சி பொங்க அவள் சொன்னாள் "நீசொல்லும் அவர், மலர்த்தோட்டத்தைச் சுற்றி வளைத்து நாசமாக்கத் திரியும் வண்டு சுசீலா..."

"இல்லை. அவர் என் நெஞ்சை ஆளுபவர். கௌரவமானவர் கல்லூரியில் பட்டவகுப்பில் பயிலுபவர்"— சொல்லிக்கொண்டே நடந்து விட்டாள் சுசீலா.

பஞ்சு மெத்தையைப் போல மிருதுவாகக் கிடந்த என்இதயத்தில் பாறையின் இறுக்கத்தை ஏற்படுத்தி விட்டாள். அழகிய பாட்டிலைக் கண்டு ஆசை கொண்ட சுசீலா உள்ளே இருக்கும் நஞ்சுபற்றி ஏன் நினைக்கவில்லை—அதுதான் சபலம். சுசீலா அந்தச் சபலத்தின் செல்லப்பிள்ளையாகிவிட்டாள்.

என் மனவயலிலே நான் விளைவித்த காதல் பயிர் முரட்டுக் காளையின் கூரிய கொம்புகளால் பிடுங்கி யெறியப்பட்டது. அந்தத் தோல்விச் சவுக்கின் பயங்கர அடிகள் என் நெஞ்சைப் பிய்த்துச் சக்கையாக்கி விட்டன. நான் டெல்லி நோக்கி ஓடினேன். அதன் பின்பு சுசீலாவுக்கும் நாதனுக்கும் கலியாணமாகிவிட்ட செய்தியை மஸ்தானின் கடிதம் சொன்னது.

என்னைக் கேட்டால் உலகத்தில் காதலிக்காமலிருக்கிறானே அவன் பாக்கியசாலியெனச் சொல்லுவேன். காதல் நிம்மதியைக் கெடுக்கிறது, பிறபணிகள் புரியவிடாது தடுக்கிறது. எப்படியோ நம்முள் புகுந்துகொண்டு நாம் விரட்ட நினைத்தாலும் ஓடாது வளைத்து வாட்டுகிறது. பாம்பு கடிக்கிறது, வலியால் துடிக்கிறேன், ஆனால் உயிர் மட்டும் போகவில்லை. எனக்கு வாய்த்த காதலியால் நான் பட்ட வேதனை இப்படித்தானிருந்தது.

டெல்லிக்கு நான் வந்து மூன்று ஆண்டுகள் முடியப் போகின்றன. என்னுடைய திருமணத்தைப் பற்றி நான் நினைக்கவே இல்லை. கொடி தனியாக வளரமுடியாது, அதற்குக் கொம்பின் துணை வேண்டும். ஆனால் மரம் தனியாக வளரலாமல்லவா— இதுபோலவே ஆண், பெண்ணின் துணையின்றித் தனியாக வாழலாமெனத் தைரியம் கொடுத்துக் கொண்டேன் பேதலித்த மனத்துக்கு.

'நான்கு நாட்களுக்கு முன்னால் சுசீலாவை டெல்லியில் சந்திப்பேனென நான் நினைக்கவேயில்லை. தமிழர் நாடக மன்றத்தின் சார்பாக நடந்த "தென்னகத்துக்கலை" யென்ற நாடகத்தைக் காணச் சென்றேன். தென்னாட்டுத் தெருக்களிலே தவழும் தெள்ளுதமிழைப் பருகலாமென்கிற உணர்ச்சியே என்னை நாடகத்துக்கு இழுத்துப் போனது.

சுசீலாவை அங்குதான் உபநடிகையாகக் கண்டேன். அதே உருவம், அதே சிரிப்பு. ஆனாலும் ஏதோ ஒரு துக்கச்சுமையால் துவண்டுவிட்டிருக்கிறாளென்பதை அவளின் முகத்திலே உணர முடிந்தது. நாடகம் முடிந்த பிறகு சுசீலாவைச் சந்தித்தேன். என்னைப் பார்த்த அதிர்ச்சியால் விவரிக்க முடியாத உணர்ச்சிகளுக்கிடையே தூக்கியெறியப்பட்டாள். என்றைக்குமே சிரித்துக்கொண்டிருந்த சுசீலா அன்று அழுதாள். "அழாதே, உன் வாழ்வு வேதனையால் கசக்கப்பட்டிருக்கிறதெனக் கருதுகிறேன்."

"நீங்கள் என்னிடம் காட்டிய இந்த ஆதரவு வார்த்தையை நினைத்துக் கொண்டே நான் நிம்மதியாகச் சாவேன்." அடக்கமுடியாத அழுகைக் கூடே சென்று போன காலத்தில் அவளின் சிந்தனையைச் சிதைத்த சம்மட்டி அடிகள்பற்றிச் சொன்னாள்.

சுசீலாவின் கணவனாக வாய்த்த நாதன் நான் நினைத்தபடியே வெளிவேடக்காரனாகிவிட்டான். திருமணத்துக்குப் பிறகு சுசீலாவின் வாழ்வில் சுகந்தத்துக்குப் பதில் சூராவளியே வீசியது. அவள் அவனோடு ஒரு வருடம் மட்டுமே வாழ்ந்தாளாம். அப்போதும் நிம்மதியில்லை. கலியாணத்துக்குப் பின்பும் காதலிகளைத் தேடுவதை வாழ்க்கைப் பிரச்சனையாகவைத்துக்கொண்டானும் நாதன். சிரித்துக் கொண்டே கிடந்த சுசீலாவின் வாழ்க்கையிலே கவலைக் கோடுகள் கிழிக்கப்பட்டன. அவள் அழத் தொடங்கினாள். நிம்மதியில்லாது அவளது வாழ்வை மேலும் நொறுக்கியெறிந்த விதமாக வாய்த்துவிட்டது நாதனின் மரணம். கசந்துவிட்ட வாழ்க்கையின் அலைக்கழிவுகளால் அடித்து விரட்டப்பட்ட சுசீலா நாடகக் குழுவிலே சேர்ந்திருக்கிறாள்.

கொட்டிய அவள் கண்ணீரைப் பரிவோடு துடைத்தேன். என் கரங்களைப் பிடித்துக் கொண்டாள் சுசீலா.

"இந்தக் குளிர்ந்த கரங்கள் தரும் சுகத்தை உணராத பாவியாகிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்." கண்ணீரால் என் கரங்களைக் குளிப்பாட்டினாள்.

சுசீலாவின் எதிரிலே நான் முதல் தடவையாகச் சிரித்தேன். அதன் அர்த்தத்தை அவள் புரிந்துகொண்டாளோ என்னவோ, எனக்கும்கூட அந்தச் சிரிப்பின் அர்த்தம் தெரியவில்லை!

என் காதல் நாடகத்தில் சோக முடிவைப் பலவந்தமாகத் திணித்த சுசீலா இன்று ஒரு நாடக நடிகை. என் வாழ்க்கையோடு இணையத் துடிக்கிறாள். இதை அவள் வெளிப்படையாகச் சொன்னபோது என்னால் என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. சுசீலாவின் பரிதாபக் கதை என் நெஞ்சைச் சுழற்றியது. அவளது வாழ்வுச் செடியின் வேரிலே வஞ்சகனொருவன் வெந்நீரைக் கொட்டிவிட்டான். அவளும் வாடிப் போனாள்.

என் உயிரையே அவருக்குக் கொடுத்துவிட்டேன் எனச் சொன்ன சுசீலா இன்று தடம் திரும்பி வருகிறாள். சிக்கல்களை விடுவிக்க முடியாது நெஞ்சம் தவித்தது. என்னை அழ வைத்த சுசீலா இன்று அழுதுகொண்டிருக்கிறாள். இன்றைய சுசீலாவுக்கும் அன்றைய சுசீலாவுக்கும் பொருத்தம் பார்த்தேன். எப்படியோ நானும் அவளும் பிரிக்கப்பட்டுவிட்டோம். இனிமேல் ஒன்று சேர இயலுமா... கசங்கிய பூவைக் கொண்டு கலியாணப் பந்தலை அலங்கரிக்கும் துணிவு எனக்கு இருக்கிறதா...!

ஒரு கன்னத்தில் அடித்தால் அடுத்த கன்னத்தையும் காட்டு என்று ஒரு மகான் அன்புக்குத் தத்துவம் வகுத்தார். காதலுக்கு இதற்கு எதிரான தத்துவத்தை உருவாக்கவே நான் நினைத்துவிட்டேன். அடைக்கமுடியாத ஆசை ஊற்றுக் கொட்டிய நெஞ்சை அலட்சியத்தால் அடைத்துவிட்டாள். மறுபடியும் என்னால் அன்பு சுரக்கவேமுடியாது போலும். குத்திய கத்தியை எடுத்து முத்தமிடுமளவுக்கு நான் பைத்தியக்காரனாக மாற நினைக்கவில்லை!

இனியும் என் வாழ்க்கையின் நிம்மதியைக் கெடுப்பதிலே எனக்கு விருப்பமில்லை. என்னிடம் உயிரோட்டத்தை, உணர்ச்சிக் கொந்தளிப்பை உண்டாக்கிய சுசீலா என்றைக்கோ செத்துவிட்டாள். இன்றைக்கு இருக்கும் சுசீலாவுக்காக நான் பரிதாபப்படலாமேயொழிய அனுதாபம் காட்டவே முடியாது. எண்ணங்களால் அமுக்கப்பட்ட மனம் தீர்க்கமான முடிவோடு பின்னிக்கொண்டது.

என்னைச் சொந்த ஊரிலிருந்து விரட்டினாள் ஒரு சுசீலா. வெகு தூரத்துக்கு ஓடினேன். இங்கேயும் அதே உருவத்தோடு ஆனால் மாறுபட்ட உள்ளத்தோடு தோன்றி விரட்டுகிறாள். ஆகவே இன்றே மதுரைக்குப் புறப்படுகிறேன். மஸ்தானுக்குக் கடிதமனுப்பி விட்டேன்! ★

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

இந்த ஆண்டு "தென்றல்" பொங்கல் மலர் சிறப்பாக வெளி வர இருக்கிறது.

மலர் தேவையுள்ளோர் முன் கூட்டியே ரூ 2 அனுப்பிவிட வேண்டும்.

மலருக்குப் பணம் அனுப்பும் பொழுது உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட மறவாதீர்கள்.

நிர்வாகி
"தென்றல்"

வெண்பாப் போட்டி-9.

ஈற்றடி :

மனமே உனக்கென்ன வாய் ?

முடிவு தேதி 28-12-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 4ம் பக்கத் தொடர்ச்சி —

பண்டித ஜவஹர்லால் நேரு, கோவிந்தவல்லப பந்த் ஆகிய காசுமீர கோசலப் பார்ப்பனர் பெயர் வரை இந்தத் தனித் தமிழ்ச் சொல் சமஸ்கிருத வழியாகச் சென்றேறியுள்ளது.

'ஐயர்' என்ற பெயர் 16- நூற்றுண்டுக்கு முன்னே, அதன் பின் கூடத் தமிழகத்துக்கு வெளியிலே வழக்கிலில்லாத சாதிப்பட்டம் அந்நூற்றுண்டில் ஐதராபாதிலிருந்து புறப்பட்டு, தெலுங்கு வட தமிழ் பகுதிகளில் பரவிய வைதிக இயக்கமே இப்பட்டத்தை அவ்வியக்கத்தை ஆதரித்த தமிழக வட திசைப் பார்ப்பனருக்கு உரியதாக்கிற்று. தமிழரல்லாதவர் இன்றும் அத் தமிழ்ப் பட்டத்தை விரும்புவதில்லை. அதை சர்மா, சாஸ்திரி, ஆச்சாரி என்று மாற்றியே பெருமைப்படுவர்.

'ஐயர்' ஆரியர் என்பதன் மரூஉருவம் என்பர் சிலர். ஆனால் தமிழகத்துக்கு வெளியிலே, ஆரிய நாட்டிலே, எங்கும் ஐயர் என்ற பெயரோ, அதன் மூல முதலாகக் கருதப்படும் ஆரியர் என்ற பெயரோ பிராமணரைக் குறித்த சாதிப் பட்டமாக வழங்கவில்லை. நேர்மாருகத் தமிழக நெசவாளர் சிலரே (சாளயர், பட்டாரியர்) அதைச் சாதிப் பட்டமாய் கொண்டுள்ளார்.

பாளி, பாகத மொழிகளில் 'ஆர்ய' என்பதன் மரூஉ 'அய்ய' என்று திரிவது உண்மையே. ஆனால் இதனால் 'ஆர்ய' என்பதே 'அய்ய' என்று மாறிவிட்டது என்று கூற முடியாது. ஏனெனில் முதலாவதாக, தொல்காப்பியர் கால முதல் தமிழில் ஐயர் என்ற சொல் வழங்குகிறது. இரண்டாவதாக, வடக்கிலேயே சமஸ்கிருதம் பிற்கால மொழி. பாளிமாகதங்கள் அதனிலும் மிகவும் பழமையான மொழிகள். 'ஐயர்', 'ஆரியர்' தொடர்புடைய சொற்களாலும், ஐயர் என்பதே ஆரியராக மாறியது என்று கூற வேண்டி வரும்.

உண்மை நிலை யாதெனில், ஐயர், ஆரியர் இரண்டும் தமிழ்ச் சொற்களே. குற்றாலத்தருகிலுள்ள 'நாடு' முன் 'ஆரி' ஆண்டதால் ஆரிநாடு, ஆரிய நாடு என்று பெயர் பெற்றிருந்ததென்று குற்றாலக் குறவஞ்சி வழக்கும் அதன் உரையாசிரியர் குறிப்பும் கூறுகின்றன. 'ஆரியர்' என்று இன்று கூறப்படும் பழம் பேரினத்தார் நடு ஆசியாவில் மற்றோர் ஆரிய நாட்டில் தங்கிய பின்னரே, தம்மை ஆரியர் என்று புதுவதாகக் கூறிப் பெருமைப்பட்டனர். அந்நாட்டில் 'ஆரிய' இனத்தவருடன் கலந்த ஆரிய மக்களிடையே ஏற்பட்ட பிளவு காரணமாக, ஒரு கடவுளை வணங்கிய பழய ஆரியராகிய தமிழினத்தவர் புதிய கலப்பின ஆரியரை முறியடித்தோட்ட, அவர்கள் சிந்து கங்கைக்கு ஓடி வந்து, பழந் தமிழினத்தவருடன் உறவு கொண்டே இந்திய ஆரியராயினர். தமிழினத்தவராகிய பழய தூய ஆரியரே ஈரானியர் என்ற பெயருடன் இன்றளவும் பாரசீக, இஸ்லாமிய நாகரிகத்தை வளர்த்தவர் ஆவர். பம்பாயில் வாழும் பழய ஈரானிய மரபினராகிய பாரசிகன் இவர்களில் ஒரு பிரிவினரே.

தமிழக ஐயர், ஐயங்காருக்கும் மூல 'ஆரியர்ப் பேரி இனத்தவர்க்கும் எந்தகைய தொடர்பும் கிடையாது. அவர்கள் வட திசையிலிருந்த திராவிடக் குருமாராகிய பார்ப்பனரே—ஆரிய நாகரிகம் என்ற புராண காலக் கலப்பு நாகரிகத்தை ஏற்று, அதை வட திசையில் புத்த சமயச் சூழலிடையே பரப்ப முடியாது அவதியுற்ற நிலையில் மூவரசர்களாலும் பிற்கால அரசராலும், சிறப்பாகச் செங்குட்டுவனாலும் சோழப் பேரரசராலும் தமிழகத்துக்குக் கொண்டு வந்து பேணப்பட்ட பண்டை வட திசை அகதிகளே யாவர். தம் வட திசைத் தோழர்களைவிட அவர்கள் பல வழியில் மேம்பாடுற்று, இன்று மீண்டும் 'ஆரிய' நாகரிகத்தை வடதிசையில் பரப்புவர்களாக அமைந்துள்ளனர்.

தூய தமிழ், தமிழ் இனப்பார்வை அவர்கள் மீண்டும் வட திசையிலும் உலகிலும் பரப்ப முற்படும் காலம், தமிழகத்தின் முன்னணிக் கொடிப் படையாக அவர்கள் சிறப்புறும் காலம் விரைவில் வரக்கூடும், வரும் அறிகுறிகள் தென்படாமல் இல்லை. ஆசிரியர் மறைமலையடிகளுக்கே வழிகாட்டியாயிருந்த பரிதிமால் கலைஞர் (சூரிய நாராயண சாஸ்திரியார்) புகழ் மரபு அத்திசை காட்டுகிறது. ★

கடலின் குமுறல்!

கீழ்வானம் வெளுத்து வந்தது. சேக்கையிலே இருந்து எழுந்த பறவைகளின் 'கிரீச்' ஒலிகள் கதிரவனுக்குப் பள்ளியெழுச்சியாக அமைந்து கொண்டிருந்தன. ஒளியை வாரியிறைத்துக் கொண்டு கதிரவன் மேலெழுந்தான். அவன் முகம் செக்கச் செவேல் என்று சிவந்து கிடந்தது!

இதையெல்லாம் சலனமற்றிருந்த கடல் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் அது அப்படிக் கதிரவனைப் பார்த்த பார்வையில் இனந்தெரியாத பரிதாபம் தான் தேங்கிக் கிடந்தது. பிறகு மெல்ல வாயைத் திறந்து பகலவனிடம் தன் ஐயப்பாட்டினைக் கேட்கவும் செய்துவிட்டது அது.

செங்கதிரோனே! நானும் உன்னை நெடுநாள் கவனித்து வருகிறேன். ஆனால் ஏனோ காரணம் மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை. நீ ஏன் தோன்றும்போதே முகத்தில் சினத்தைத் தேக்கிக்கொண்டு புறப்படுகிறாய்? உன் கண்கள் உலகத்தையே எரித்து விடுவனபோலப் பார்க்கின்றனவே ஏன்?—கடலுக்கு இவ்வாறு கேட்டு முடிவதற்குள் தொண்டை யடைத்திருக்க வேண்டும்; மேலே ஒன்றும் பேசாமல் பதிலுக்காகக் கதிரவனை உற்றுப் பார்த்தது.

கடலின் குரலைக் கேட்ட கதிரவன் மெல்ல ஒருமுறை அதை நோக்கினான். பிறகு, "கடலே! உன்னிடம் சொல்வதால் என்ன பயன் ஏற்படப்போகிறது? இருந்தாலும் என் மனச்சுமையை உன்னிடமாவது சொன்னால்தான் எனக்கு நிம்மதி ஏற்படும்போல இருக்கிறது...உனக்கே தெரியுமே! நான் மறைந்ததும் என் வழியைப் பின்பற்றி வருகிறானே ஒரு கோழை. அவன்தான்! அவனையும் என்னையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உலகத்திற்கு யாரால் அதிகம் நன்மை கிடைக்கிறது? என்னால்தானே? இதைக்கூட கிஞ்சிற்றும் எண்ணிப் பார்க்காமல் இந்த தமிழ்ப் புலவர்கள் எதற்கெடுத்தாலும் அவனையே அழைக்கிறார்கள்; அந்த உதவாக்கரையைப் பற்றி எழுதாத கவிஞனே இருக்கமாட்டான். இதில் எங்கேனும் நியாயம் இருக்கிறதா என்று நீயே சொல்! அதனால்தான் இந்த நன்றிகெட்ட உலகத்தைப் பார்ப்பதற்கே வெறுப்பு தட்டுகிறது" என்று தன்னுடைய குறையுரை காதையைப் படித்துக்காட்டினான் பகலவன்!

"ஆமாம். நானும்தான் பார்த்துவருகிறேன். செத்துச் செத்துப் பிழைக்கும் அவனைப் புகழும் அளவிற்கு, விரிந்து பரந்து கிடக்கும் என்னைக்கூட யாரும் போற்றுவதில்லை. காதலர்முதல் கவிபாடுவோர் வரை அவன் தோன்றிவிட்டால் பொருள் அற்ற முறையில் அண்ணாந்து பார்த்து மகிழ்கிறார்கள். சேச்சே! இது மிகவும் அநியாயம்தான்! அவன் கொட்டத்தை அடக்க நாம் ஏதேனும் முயற்சி எடுக்கத்தான் வேண்டும்......ஆம். ஒரே ஒரு வழிதான் உள்ளது. அவன் வானத்தில் வரும்போது அவனை உலகத்தின் கண்களிலிருந்தே மறைத்துவிடுவதுதான் அது. நீங்கள் என்னுடன் ஒத்துழைத்தால், அதைச் செய்துமுடிக்க நல்ல ஆட்களைத் தயாரித்து அனுப்புவேன்" என்று ஒரு புது வழியைப் பகலவனின் காதோடு காதாகச் சொல்லியது அந்தப் பொறுமையே உருவான கடல்!

அன்றே திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டன இரண்டும்! கடலிலிருந்து கூட்டம் கூட்டமாக முகில்கள் தோன்றி வானவெளியில் எழும்பின! பல்வேறு உருவங்களில் படையெடுத்த அவை மாலைமுடிவதற்குள் வானத்தையே அடைத்துவிட்டன. அதைக்கண்ட கடல் மாதும் கதிரவனும் மகிழ்ச்சியால் பொங்கிப் பூரித்தனர்.

ஆனால் கிழக்கே திங்கள் தோன்றியது. உதிக்கும் நிலவைக் கடல் ஒருமுறை ஆணவத்துடன் பார்த்தது. மீண்டும் அண்ணாந்து பார்த்துத் தான் அனுப்பிய முகில் வீரர்களை நோக்கியது. மேகக் கூட்டங்கள் ஆங்காங்கே சூழ்ந்து நின்று நிலவின் ஒளியைத் தடுத்து நிறுத்த பல்வேறு கோலங்களிலே காத்திருந்தன.

ஆனால் அப்பொழுது திடீரென்று விண்ணிலே ஒருவித பேரிரைசசல் எழுந்தது. காற்றரசன் தனக்கே உரிய ஒலியுடன் வானவெளியில் வலம் வந்தான். அதைக்கண்ட முகிற்படைகள் அவன்முன் நிற்கமாட்டாமல் சின்னாபின்னமாகச் சிதறி ஓடின! எதிர்பாராத இந்த நிகழ்ச்சியைக் கண்டு கடலுக்கு உடலெல்லாம் எரிந்தது! தன்னுடைய அலைக்கரங்களை உயரத் தூக்கிக் காற்றைத் தாக்கத் தொடங்கியது!

ஆனால் பாவம்! காற்று இன்றுவரை அதன் கைகளுக்கு அகப்பட்ட பாடில்லை.

—கா. வேழவேந்தன்

எங்கும் கிடைக்கும்.

இதுதான் திராவிடநாடு

-13-

கா. அப்பாதுரையார்

மொழியின் சொற்கள் மொழியுடன் வளர்பவை. அவை என்றும் முற்றிலும் பொருள் மாறுபட்டு விடுவதும் இல்லை. அதே சமயம் என்றும் அவை முற்றிலும் ஒரே பொருளைச் சுட்டுவதும் இல்லை. அடிப்படைப் பண்பு கெடாமல், பண்பு வளர்ச்சிப் பெற்றபடி பொருள் எல்லை மாறுபடும், உயர்வு தாழ்வடையும். எடுத்துக்காட்டாக, இன்று ஆங்கிலத்தில் உந்து வண்டிக்குப் பயன்படுத்தப்படும் சொல் (car) முன்பு ஒய்யார வண்டி அல்லது விசையாகச் செல்லும் வண்டி அதாவது தேருக்குப் பயன்படுத்தப்பட்ட சொல்லே. தொடக்கத்தில் விசைத்தேர் (motor car) என்று வழங்கிப் பின் 'தேர்' என்ற பொருளுடைய சொல்லாகவே வழங்கிற்று. இச்சொல் ஆங்கில நாட்டார் உந்து வண்டி அல்லது விசை வண்டியில் அமைந்துள்ள முன்னேற்றத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டு, ஓடுகிற வரலாருக இயங்குகிறது.

'இனம்' என்ற சொல்லும் திராவிடர் நாவில் இனச் சார்பாகத் திராவிட மக்கள் அடைந்த முன்னேற்றங்கள் அனைத்தையும் குறித்துக் காட்டுவது ஆகும். ஆனால் அதன் மேலையுலகச்சொல் (race) போலவே அதை நாம் குடும்பத்திலிருந்து தொடங்கி, தேசிய இனம், மனித இனம்வரைக் கொண்டு செல்கிறோம். ஓருலகம், ஒரே மனித இனம் நோக்கிய திராவிடப் பண்பாட்டின் வளர்ச்சியை இது குறிக்கிறது. அது மட்டுமன்று. ஆங்கிலச் சொல்லின் அடைவடிவம் (racy) இனப் பண்பு அல்லது உயிர் வளர்ச்சிப் பண்பையும் அதன் பயனை ஆக்கவளம், இன ஆக்க வளம் குறிப்பதுபோல, ஆங்கிலச் சொல்லை விடச் சிறந்த முறையில், அது தமிழில் வளமும் இனிமையும் சிறப்பும் உடையது. இன வாழை, இன மலர் என்ற வழக்குகளில் அது இன நலமுடைய என்ற பொருளும் இனப்பரப்பு அல்லது நீடித்த இனப் பயிற்சியின் ஆக்கமுடைய என்ற பொருளும் தருகிறது. ஆனல் ஆரிய வழக்கிலோ 'இனம்' என்ற இதே சொல் படிப்படியாக ஆரிய நாகரிகம் அடைந்து வந்த பிற்போக்கு, பிளவு, உயர்வு தாழ்வு மனப்பான்மைகளை யெல்லாம் குறிக்கிறது. தமிழில் 'கீழினம்' என்றால் பண்பில் இழிந்தவர் என்று மட்டும் தான் பொருள். ஆரிய வழக்கில் அது பிறப்பில் கீழ்ப்பட்ட என்று தமிழன் உள்ளத்திலேயே இல்லாத ஒரு பண்பைத் தமிழனிடமே புகுத்திவிட முயல்கிறது.

ஆரியரும் அவர் சார்பில் இருந்து தமிழ்ப் பண்புணராதவரும் கூறும் பொருளில் இன வேறுபாடோ, வேற்றுமையோ எதுவும் திராவிடர் கனவில்கூடக் கிடையாது. திராவிட இனம் என்பது பிறப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்ட இனமன்று. பிறப்புடன் பண்பு சேர்ந்த இனத்தையே அது குறிக்கும். அப்பண்பு பிறப்புக் கடந்து செல்வந் தங்தலில், திராவிடராகப் பிறந்தவரையும் அது அப்பண்பில் இழையவிட்டு, தம் பண்பாட்டில் அவர்களையும் அவர்கள் விரும்பினுல், விரும்பிய விரும்பிய அளவும் சேர்த்துக்கொள்ளும் தன்மையுடையது. ஆனுல் திராவிடருடன் இணைய விரும்புபவர்கள் திராவிடர் உரிமையையே கெடுப்பவராக இருத்தலாகாது. திராவிடப் பண்பு ஆரியர் வரவால், அவர்கள் பண்பாட்டின் கலப்பால் கேடடைந்த வகை இதுதான். பெருந் தன்மையுடன் இனவேறுபாடு காட்டாது தம்மை ஏற்று ஆதரவு தந்த தமிழன் உரிமையையே கெடுக்க முற்பட்ட ஒரே இனம் ஆரிய இனம். தமிழினத்தவராகிய தெலுங்கர், கன்னடியர், அயலினத்தவராகிய மராட்டியர், வங்காளியர், தொலை இனத்தவராகிய அராபியர், யூதர்—பெரும் தமிழருடன் கலக்கும்போது தமிழன் உரிமையை, தமிழ் மொழி உரிமையைச் சூறையாட எண்ணியதில்லை. அதில் அவர்கள் அக்கரைக் காட்டவுமில்லை. ஆனுல் ஆரியரும் ஆரிய மயமான பிற இனத்தவரும்—ஆரிய மயமான நிலையில் மராத்தியரும், வங்காளியரும், தெலுங்கரும் மலையாளிகளும் கூடத் தமிழர் உரிமைகளைக் கெடுக்க முற்படுகின்றனர். அது மட்டுமா! ஆரிய மயமாய் பட்ட தமிழர் தமிழரையும், தெலுங்கர், தெலுங்கரையும் உரிமை கெடுத்துத் தாழ்த்துத் தயங்கவில்லை. உண்மையில் ஆரிய மயமான ஆரியர் மற்ற ஆரியர் உரிமை கெடுத்துத் தாழ்த்தக் கூடக் கூசுவதில்லை. ஐயங்கார்—ஐயர் சண்டை, ஐயங்கார்களுக்குள் வட கலை, தென் கலைப் போராட்டம், ஆதிக்க மொழியாகிய இந்திக்குள்ளும் சமஸ்கிருத மயமான இந்தியா, தாய் மொழி இந்தியா, என்ற வாதம் ஆகியவை இதற்குச் சான்றுகள்.

ஆகவே ஆரிய திராவிட இன வேறுபாடு. பிறப்படிப்படையான, நாட்டடிப்படையான ஒரு வேறுபாடு மட்டுமன்று. பழக்க வழக்க அடிப்படையான சமுதாய வேறுபாடு, மொழி அடிப்படையான தேசிய வேறுபாடுமட்டும் கூட அன்று. அது ஒரு பண்படிப்படையான வேறுபாடு. ஒன்றுக்கொன்று நேர் எதிரான குறிக்கோள்களையுடைய ஒரு முரண்பட்ட வேறுபாடு. திராவிடநாடு பிரிந்து தனித்து வாழ்வதால் ஏற்படும் நன்மை திராவிட நாட்டுத் தேசிய வாழ்வின் நலம் மட்டுமன்று. அந்த நலம் திராவிட நாட்டில் திராவிடப் பண்பைத் தங்கு தடையின்றி வளரச் செய்வதால், அப் பண்பலைகள் ஆரிய நாட்டையும் வளப்படுத்தும் தன்மையுடையவையாகும். திராவிட நாட்டில் திராவிடனைச் சுரண்டுவது நின்றுவிடும். அதுமட்டுமன்று. ஆரிய நாட்டிலும் ஆரியன் ஆரியனைச் சுரண்டும் இன்றைய நிலை அதன்பின் நீடித்திராது.

ஆரியர் விரும்பும் ஆரிய திராவிட ஒற்றுமை ஆரிய திராவிட வேறுபாட்டையும் ஆரிய திராவிட உயர்வு தாழ்வையும் அடிப்படையாகக் கொண்டது என்பதைக் கீழ் திசை, மேல் திசை ஒற்றுமை தெள்ளத் தெளியக் காட்டும். ஆரிய திராவிட வேறுபாடும், அதில் உயர்வு தாழ்வு கற்பித்துப் 'போலி ஒற்றுமை' வளர்க்கும் ஆரியப் பண்பாடும் இன்று திராவிட நாட்டிலும் உண்டு. ஆரிய நாடாகிய வட நாட்டிலும் உண்டு. ஆகவேதான் இந்த இரண்டு நாடுகளிலும் அக்கிராகாரங்கள் உண்டு. அம்பட்டனும் உண்டு. ஆரிய திராவிட வேறுபாடோ, அதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ள ஆரிய ஒற்றுமையோ இல்லாத இங்கிலாந்தில், பிரான்சில், அம்பட்டன் உண்டு. அக்கிரகாரம் கிடையாது. அதுமட்டுமல்ல. அம்பட்டன் ஒரு தொழிலாளி. அவன் பிறக்கும்போதே அம்பட்டனல்ல. அவன் உறவினரெல்லாம் அம்பட்டரல்ல. ஆரிய திராவிட வேறுபாட்டில் அடிப்படையாக ஆரியம் நிலவும் திராவிட நாட்டிலும் ஆரிய நாட்டிலுமே அக்கிராகாரம் ஒரு இனமாகவும் அம்பட்டன் அதனுடன் படைப்புக்கால முதல் ஊழி முடிவு வரையும் தொடர்பற்ற மற்றோரினமாகவும் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆரியம் வாழும் இடத்தில் ஒரு நாடல்ல, ஒரு ஊர், ஒரு தெரு, ஒரு வீடு கூட இன வேறுபாடற்ற ஓரினமாக வாழ முடியாது. எக் காலத்திலேனும் அக்கிராகாரம் ஒரு தனி இனிமாக வாழ வேண்டும் நிலை ஏற்பட்டால், அது வாழ முடியாது. ஏனெனில் அதில் அம்பட்டன் இருக்க முடியாது. வண்ணன் இருக்க முடியாது. அம்பட்ட இனத்தில் பிறந்த ஒருவனும் வண்ணன் இனத்தில் பிறந்த ஒருவனும் புதிதாகப் பிரமதேவனுல் படைக்கப்பட்டுத்தானுக வேண்டும். அதுபோலத்தான் வேளாள இனம், வீர இனம், வணிக இனம், தட்டார் இனம் எல்லாம் கடவுளே படைத்து அவர்களுக்கு அனுப்பியாக வேண்டும்.

திராவிடம் நாகரிக அடிப்படையாக, வரலாற்று அடிப்படையாக ஒரு இனம். ஆரியம் அது போன்ற இனம் வகுக்கவில்லை. திராவிடம் ஒரு தேசிய இனமாக்கி, அதனடிப்படையில் ஓருலகில் பங்கேற்று, ஒரு வகை வளர்க்க முடியும். ஆரியம் ஒரு நல்ல உலகையோ, தேசியத்தையோ அல்ல, ஒரு சமுதாயத்தையோ, ஊரையோ, குடும்பத்தையோகூட அமைக்க முடியாது. பிராமணப் பெண்கள் மட்டும் தங்கள் கல்வியறிவைத் தம் இனம், பெண் இனம்பற்றிய சிந்தனையில் செலுத்தத் தொடங்கி, 'ஆரிய' ஆராய்ச்சியில் இறங்கிவிட்டால், பிராமணக் குடும்பங்களே நடைபெற முடியாது. ஏனென்ருல், பிராமணப் பெண்களையெல்லாம் ஆரிய நாகரிகம் சூத்திரர்கள் என்று கருதி, பஞ்சமரில் ஆடவர்களை மதிக்கும் அளவுகூட, நம்பும் அளவுகூடத் தம்பி, தந்தை, கணவன்மார்கள், அண்ணன் தம்பிமார்கள், பிள்ளைக்ள் தம்மை மதிக்கவில்லை, நம்பவில்லை என்பதைக் காண்பர். அது மட்டுமோ, தாம் வணங்கும் தெய்வங்களில் கூட, பெண்ணுருவான தெய்வங்கள், பார்வதி, இலக்குமி, சரஸ்வதி, இந்திராணி ஆகியோர் பஞ்சமரில் ஆண்களைவிடக் கீழாக மதிப்பிடப்பட்டு இழிக்கப்படுவது காண்பர்.

சமஸ்கிருத நாடகங்களில் தேவர்களும் தேவர்களுடன் உறவாடும் ஆரியப் புரோகிதர்களும் அரசர்களும் வீரர்களும் தேவ மொழியாகிய சமஸ்கிருதத்தில் பேசுவதாக நாடகக் கவிஞன் காட்டுகிருன். சூத்திரர்களாக வரும் நாட்டு நகர மக்களும் பண்பை கூறும் மனித மொழிகள் அதாவது ஆந்திர மொழிகளாகிய பாரதங்களில் மனித உலகில் பேசப்படும் தாய் மொழிகளில் பேசுவார்கள். ஆனுல் பெண்கள் பற்றியவரை இதே தாய்மொழியில் தான் வேலைக்காரப் பெண்டிரும் சரி, பணிப்பெண்கள், பாங்கியர்களும் சரி, அரசியரும் சரி பேச வேண்டும். எம்பிராட்டி சீதை, உலக அன்னை பார்வதிகூட சூத்திர மொழியில்தான் பேச வேண்டும்.

- தொடரும் -

46வது வட்ட தி. மு. க. நிதிக்காக

5-1-58 ஞாயிறு மாலை 6 மணிக்கு

கலைஞர்

மு. கருணநிதி, எம். எல். ஏ.

தலைமையில்

'எதிரொலி'

நாடகம் நடைபெறும்

டிக்கட் ரூ. 2, 1, 8 அணு

அறிவிப்பு

பல நண்பர்கள் நான் எழுதிய நூல்கள் வேண்டுமென்று கேட்டு எழுதிக் கொண்டிருக்கின்ருர்கள். அவைகளை திருச்சி திராவிடப் பண்ணைக்கு தந்து விட்டேன். ஆகையால் என் நூல்கள் வேண்டுவோர் திராவிடப் பண்ணை, திருச்சி-2. என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன் எனத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் அறிவிக்கிருர்.

ஒட்டக நாக்கு இவருக்கு!

திறனாய்வு ஒரு கலை. தமிழகத்திற்கு இவ்வாய்வு புதியது. இத்திறனாய்வை கலவைத் தமிழில் "வியர்சனம்" என்பர். காவியத்தையோ, கவிதைத் 'துக்கடாக்'களையோ, கதையையோ வேறு எவ்வெழுத்தையும் பேச்சையும் கூத்தையும் பகுத்தறிந்து தனக்குப் பட்டதைக் கூறுவது திறனாய்வு.

எடுத்துக்கொண்ட பொருளின் தங்க ரேகைகளை, தரங்குறைவான இடங்களைக்கண்டு சுட்டிச் சுட்டி சொல்வது திறனாய்வு.

ஆனால் திறனாய்வு, காலத்திற்குக் காலம் மாறும் தன்மையது. நேற்றைய "சிலப்பதிகாரம்" பற்றிய திறனாய்வு இன்று தவறு எனப் படலாம். கடந்த கால "கம்பகாதை" பற்றிய திறனாய்வு இன்று "மிகை! மிகை!!" எனக் கூறப்படலாம்.

திறனாய்வு என்பது முனை மழுங்காக் கத்திமேல் நடப்பது போன்றதே. இதில் பெரும் பெரும் அறிஞர்கள் வழுக்கி, விழுந்து விழுந்து செல்கின்றனர்.

'தினமணி சுடரில்' தொடர்ந்து திரு. இரா. ஸ்ரீ தேசிகன் அவர்கள் நம் பண்டைய இலக்கியங்களை திறனாயும் வகையில் எழுதி வருகிறார். ஆங்கிலம் அறிந்தவர்; அதன் இலக்கிய வளங்களையும் அறிந்தவர்; ... சிறந்திருப்பவனாவான்" எனும் பொருள் படும்படி கூறுகிறார். குறையில்லாதவனே தலைவனாகிறான் என்பது இவர் கருத்துப் போலும்! அவ்வகைத் தலைவனைக் கொண்ட நற்கவிதைத் தொகுப்பே காவியமாகும் என்னும் முடிவு கிட்டுகிறது.

கோவலன் குறையுடைய தலைவனா? ஆயின் என்ன குறை செய்தான்? அந்த காலம் அனுமதித்த 'அழுகுடன் வாழ்வதை' குறை என்பேமோ?

ஆயின், இவர் புகழும் 'கம்பகாதைத்' தலைவனின் செயலைக் காட்டிலும் இழிவான செயலை கோவலன் செய்தானா? 'மணிமேகலை' கோவலன் அறச்செயல்களைப் பற்றி விரிப்பதை ஈண்டு உய்த்துணரத்தக்கது.

இவர் தொடர் கட்டுரைகளில் கலைமிகு முத்தமிழ் வித்தாரச் சங்க இலக்கியங்களுக்கு ஆங்காங்கு கனலும், அனலும், தழலும், அழலும் இட்டுச் செல்வதைக் காண்போம்.

இவர் உவமைகளெல்லாம் பெரும்பாலும் 'பிரபந்தங்களிலிருந்தும், "கம்பனி"லிருந்தும், ஆங்கில நூல்களிலிருந்துமே வரும். தப்பித்தவறி "திருமுறை", நூல்களிலிருந்தும், சங்க இலக்கியங்களிலிருந்தும் 'ஒப்புக்கு' வைப்பார்.

ஆயிரம் மனைவிகளை மருவியவனோ, ஐம்பது பெண்களை அடைந்தவனோ, அரசனோ, அரசருக்கரசனோ அல்லன் கோவலன் **பெருங்குடி மகன் ஒருவனின் கதையை, அரசருக்கு அரசனின் தம்பி பாடுவது வேறெங்கணும் உள்ளதா?**

துறவி பூண்ட மகளைப் பாடுவது அக்காலத்தின் புரட்சியன்றோ? அத்துறவு பூண்ட மகள் யாவள்? அரசியா? அரசருக்கடுத்த 'அவைக்களச் செல்வி'யா? கன்னியா? செல்வனின் துணைவியா? செல்வனின் மகளா? இல்லை! செல்வம் இழந்த செல்வனைக்கூடிய கணிகையவயிற்று மகள் மணிமேகலை. இதுபோன்ற பெண்ணின் துறவை பாடிய காவியம் வேறெங்கணும் உள்ளதா? உன்னுக! உன்னுக!!

தலைவரை விடுவோம். கவி நயத்திற்கு வருவோம். மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவால் தொடங்கி, வரி குரவை எனும் இசைப் பாடல்களையும் இடையிடையே கொண்டு, அகற்பாவால் ஆக்கப்பெற்று முப்பது காதைகளைக் கொண்ட சிலம்பின் அமைப்பைக் காட்டிலும் தேசிகனாரின் காதலைக் கவர்ந்த "நூற்கள்" எந்த உயர் அமைப்பைப் பெற்றவை? சொல்வளமா? பொருள்வளமா? எவை வேண்...

உணர்வே, அருஉரு,
வாயில், ஊறே,
நுகர்வே, பிறப்பே,
பிணி, மூப்பு, சாவே
அவலம், அரற்று, கவலை,
கையாறு, என
நுவலப் படுவனநோய் ஆகும்மே
(மணி. பாவை. 181)

இவைபோன்ற அறவிளக்கம் யாண்டு கண்டோம்?

தேசிகனாரே! தேசிகனாரே! சிலம்பும், மேகலையும் எங்ஙனம் காவியக்கட்டிலிருந்து நழுவிவிடுகின்றன? அவைகளில் அமைப்பிலா? நயத்திலா? சொல்வளத்திலா? அறங்கூறும் தன்மையிலா? அல்லது கதைப்போக்கிலா?

காக்கைக்கு வேப்பம் பழம் இனிக்குமாம். பர்மாவில் கசப்பைச் சுவைத்துச் சுவைத்து உண்பார்களாம். ஒட்டகம் வேப்பிலையை விரும்பி உண்ணுமாம்.

தேசிகனாரின் "விமர்சனம்" எனும் திறனாய்வைக் கண்ட போது மேற்கண்ட உவமைகள் நினைவிற்கு வரும்.

தேசிகனாரின் "சங்க இலக்கியம்" பற்றிய 'கண்'ணோட்டம் தனித்தது. அந்தக் கண், வைணவ விழிக் கோளத்தாலும், ஆங்கிலக் கருவிழியாலும் ஆனது. இக்'கண்ணுக்கு' கண்மணி இல்லை!

சிலம்பும் மேகலையும் தமிழின் அணிகலனல்லவாம்!

ஆனால் அவர் கட்டுரைகளைத் தொடர்ந்து படிப்போருக்கு அவருடைய இலக்கிய நோக்கும் நெஞ்சப் பாங்கும் புரிந்துவிடும். மேலைநாட்டு நூல்களுடன் தமிழ் இலக்கியங்களை ஒப்பிட்டுக் கூறுவதில் வல்லவர்; "கதையைத் திருடாதே!" எனக் கூக்குரலிட்ட "ரசமட்டம்" புதுமைப் பித்தனின் கதைகளைக்கூட, "இக்கதைகள் போன்று பிறமொழிகளிலும் உள்ளன" எனத் துணிந்து கூறியவர்.

இத்துணிவு நல்லதே. ஆனால் அது அறிவின் அடிப்படையில் அமையவேண்டும். சில வாரங்களுக்கு முன்பு "சீவக சிந்தாமணி" பற்றி எழுதுகையில் "**சிலப்பதிகாரமும் மணிமேகலையும் உண்மையைக் கூறுமிடத்து இவை காவியங்களல்ல**" மேலும் முன்னுரையில் (அது பத்திரிகை ஆசிரியர் இட்டுமிருக்கலாம்) 'கம்பராமாயணத்திற்கு முன்பிருந்த ஒரே காவியம் சீவக சிந்தாமணி' எனக் கூறுகிறார்.

காவியம் என்பது பற்றி இவர் கொண்ட பொருளென்ன? காவியத்தைப் பற்றித் தொட்டும் தொடாமலும் தொன்னூறு(!) கருத்துக்கள் ஆங்காங்கு கூறியிருக்கிறார். இவை பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மாறாக இருப்பவை.

ஓரிடத்தில் தலைவன் ஒழுக்கத்திலும், அறிவிலும், அழகிலும் ...

ஆக, இவருடைய திறனாய்வு துலாக்கோல்போலதன்று; ஆடியில்லாக் கண்ணும் அல்ல! (வைணவ) சமய நோக்கும், (சங்க காலத்தின் அருமைநினைக்காத) நெஞ்சப் பாங்குமே இவருடையவை!

திறனாய்வதிலும், சென்ற காலத்தைத் திறனாய்வதற்கு பொறுமை கலந்த பண்புதேவை. வளர்ந்து வரும் இலக்கியப்படி பார்த்தாலும் சங்க இலக்கியங்கள் இக்காலத்திற்குப் பெரிதும் பொருந்துபவை.

மனிதன் குறையுடையவன். ஆக, இலக்கியங்களிலும் அக்குறையுடையவனையே இட்டு மகிழும் பாங்கு, அக்காலத்திலும் இக்காலத்திலும் உண்டு. அதன்படி நோக்கினும் சிலம்பும் மேகலையும் எந்நூலுக்கும் குறைந்தவை ஆகா!

...டும்? ஏன்-எதற்குக் குறைந்தவை?

செல்லல், செல்லல்!
சேயரி நெடுங்கண்!
அல்லிஎம் தாரோன்-
தன்பால் செல்லல்!!
(மணி. கந்தற் 27)

பொன் இலங்கு பூங்கொடி!
பொலம்செய் கோதை வில்லிட
மின் இலங்கு மேகலைகள்
ஆர்ப்ப ஆர்ப்ப......
(சிலம்பு. வாழ்த்து. 21)

இவைபோன்ற 'சொற்சிலம்பு' எங்கே கண்டோம்?

செய்ந்நன்றி கொல்லன்மின்;
தீநட்பு இகழ்மின்'
பொய்க்கரி போகல்மின்;
பொருள்-மொழி நீங்கல்மின்
அறவோர் அவைக்களம்
ஆகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்.
(சிலம்பு. வாழ்த்து. 194)

இப்படி இவர் நச்சு வித்துக்களை விதைத்துக் கொண்டே போகிறார். தடுப்பாரில்லை; எதிர்ப்பாயுதம் எடுப்பாருமில்லை. "சிலம்பும், மேகலையும் தமிழன்னையின் அழகு அணிகளல்ல" எனக் கூறும் இவ்வுரை நச்சுவிதை ஏந்தி நந்தமிழ்க் கழனியில் திரிபவர் என்று கூறுவதை விட வேறு சொற்கோவை" உண்டா?

ஒருவர் தமிழ்க் காப்பியங்களை இப்படிக் கூறித் திரிகிறார். நாமும் ஊமையாய்-ஆமையாய்-கேளாக் காதர்களாய் வாழ வேண்டுமா?

தமிழை—தமிழின் அங்கத்தைக் குறைகூறுவோரை நினைக்கும்போது

தொண்டர் படை ஒன்றமைத்துத்
தமிழ் எதிர்ப்போர் தொடர்ந்
தெழுதும் ஏட்டையெல்லாம்

கண்டறிந்த படி அவற்றை
மக்களெலாம் மறுக்கும் வணம்
கழறவேண்டும்

எனும் பாடல் நினைவுக்கு வருகிறது.

ஆக, எழுக தமிழரே! விளக்கமின்றி தமிழகத்தின் "சங்க காலத்து" நூற்களை குறைகூறும் உரையை நம்மறிவால் தூள் தூளாக்குவோம்!

-திரு. வி. க. அடியான்

கதி. இராமனுதன்

தென்றல்-விளம்பர நிர்வாகி கதி. இராமனுதன் அவர்கள், பொங்கல் மலருக்காக விளம்பரம் சேகரிக்க, கடந்த 29-ம் தேதியன்று சுற்றுப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். தென்றல் வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட தோழர்களும், வணிகப் பெருமக்களும் இயன்றஅளவு விளம்பரம் சேகரித்துக் கொடுத்து அவரோடு ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

—கண்ணதாசன்

8. 'காய்' எனத் தொடங்கி 'பழம்' என முடித்தல்

காய்ந்தெழுந்த பண்டிதரே ! காட்டு மிராண்டிகள்யார் ?
போயொழியும் உங்களிசை புத்தியொடு-ஆய்ந்துரையும்
சீர்கலையில், அன்பறிவில் செந்தமிழர் பண்டுமுதல்
பாரில் பழுத்த பழம்.

—சி. தணலன், தச்சம்பத்து.

காய்ந்த மலரானாள்; கட்டுடலைப் பேணுமல்
தேய்ந்த மதியானாள் தேமொழியாள்-மெய்யாய்
முகமலர்வாள் கண்டுவிடில்; முன்னமர்ந் தன்பாய்
அகமகிழ்ந் துண்பாள் பழம்.

—தாரா, பள்ளபட்டி.

காய்கதிரோன் மேலைக் கடல்குதித்தான்; புள்ளினங்கள்
சேய்அடையும்; வானம் சிவப்பேறும்-தேய்மாலை
போய்மறையும்; திங்கள் புறப்பட்டான்; கீழ்வானில்
பாயுமெலு மிச்சம் பழம்.

—நாவுக்கரசன், காரைக்குடி.

காய்தலின்றி அன்னவளைக் கைப்பிடிப்பாய் என்றின்று
வாய்திறந்தென் தந்தை விளம்பிட்டார்-மாய்வதேன் !
கோலத் திருகிலவே ! கோகிலமே ! நீயெனக்குப்
பாலில் விழுந்த பழம்.

—ஆ. வீ. நாதன், திருவேங்கடபுரம்.

காய்நிலவில் நள்ளிரவில கள்ளின்பம் துய்த்ததெலாம்
பாயுந் தலையணையும் தானறியும்-சேய்தவழும்
மென்வயிற்றில் எட்டி உதைக்கின்றீர் ! என்செய்வேன்
இன்றுநான் எச்சிற் பழம்.

—து. கருப்புசாமி, சென்னை.

காய்நிலவை யொத்தமுகம் கார்கூந்தல் விற்புருவம்
வாய்பவளம் முத்து வரிசைப்பல்—தூய்வெண்மை
அன்னமும் வெட்கும் அழகுநடை வேல்விழியாள்
கன்னம் சிவந்த பழம்.

—"தேனி மாயன்", தேனி.

காய்வுற்ற சுள்ளியினில் தீவைத்தால் பற்ருதோ ?
ஆய்வற்றறன்; அற்பப் பதரானேன்;—ஆயிழையின்
நோய்நலிவை நோக்காமல் நானடித்தேன்; நங்கையவள்
போய்விட்டாள் கிட்டாப் பழம்.

—"உமாதாசன்", சென்னை-11.

காய்ந்த மலரானேன்; காரிகையே ! உன்நினைவால்;
தேய்ந்தே உருகுகின்றேன்; தெள்ளமுதே !—ஆய்மலரே !
பாய்ந்துவந்து முத்தம்தா; பாவையே ! நின்னுதடு
கொய்யாத கொவ்வைப் பழம் !

—ந. தா. அண்ணுமலை, கடலூர்.

காய்த்துக் கனிவிளைத்துக் கண்கவரும் எட்டியென
ஏய்த்துப் பிழைக்கவரும் இந்திக்கு-வாய்க்கரிசி
போட்டனுப்ப நீமறந்தால் பெற்றெடுத்த பிள்ளையினைப்
போட்டழிக்கும் நச்சுப் பழம்.

—முத்துநிலா, சென்னை-21.

காய்ந்த சருகாகக் காத்திருக்கும் என்தாயே
மாய்ந்திடல் உண்மைதான் என்ருலும்-ஆய்ந்திடில்
நல்லறங் காத்த பெருமாட்டி நீதானே
இல்லற வாழ்வின் பழம்.

—"இறைவன்", புதுவை.

காய்த்துக் குலுங்கும் கவின்புகழ் தண்டமிழை
பிய்த்தே வடவர்தம் பேரணைப்பில்-சாய்த்துவிடின்
பட்டுப்போ மன்றிப் பலனும் நமக்குத்தான்
கிட்டுமா கொய்யாப் பழம் ?

—துரை. கணேசன், இண்டூர்.

காய்தமிழா எட்டிக்காய் இந்தி நமக்கெதற்கு
தூய்தமிழின் மேன்மை சொலுந்தரமோ-ஆயுங்கால்
நல்லுலகச் சோலையில் நந்தமிழர் செந்தமிழ்தான்
பல்சுவையை நல்கும் பழம்.

—சோ. கண்ணப்பன், பேரூர்.

காய்ந்த சருகானேன் காதலால்; வேற்றூர்தான்
போய்விட்ட அன்பர் வரவில்லை-மாய்ந்த
உளத்தோடு சோர்ந்தேன் உடன்வந்தார்; தந்தாரே
கள்தோற்கும் முத்தப் பழம்.

—மு. கோவிந்தராசன், வாணியம்பாடி.

காய்த்த பழமும் கலைத்தமிழும் நேரென்று
ஆய்ந்த புலவர் அறைகுவரோ-மெய்த்தோழி
உண்டாலும் கேட்டாலும் ஒண்புகழ்ச் சொல்லினிக்கும்
பண்டமிழ்க்(கு) ஒப்போ பழம்.

—க. முத்தானந்தன், கருமத்தன்பட்டி.

காய்ந்திருக்கும் வெண்ணிலவில் காத்திருந்து நேற்றென்தோள்
தோய்ந்திருந்தாள்; என்சொல்வேன் தோகைக்கு-வாய்ந்திருக்கும்
பல்லெல்லாம் மல்லிகைப்பூ; பார்க்குங்கண் மாம்பிஞ்சே;
சொல்லெல்லாம் தேன்மாம் பழம்.

—ஆ. பொ. பாலன், ஆத்துப்பொள்ளாச்சி.

காய்ந்த உதட்டில் கனிமுத்தம் ஒன்றீந்தே
ஓய்ந்திட்ட நெஞ்சில் உணர்வூட்டித்-தோய்ந்திட்ட
கூட்டுத்தேன் எச்சில் குழைத்துக் கடைக்கண்ணால்
காட்டுவதே காதற் பழம்.

—மு. காளத்திநாதன், அரக்கோணம்.

காயோகாய் ! என்றொருத்தி கத்திக்கொண் டேகிடவே
ஏய்பெண்ணே ! என்னகாய் ? என்றேன்நான்;-ஓய்ஐயா
வாழைக்காய், என்றிந்தாள்; வாங்கிவைத்த மூன்றும்நாள்
ஏழைக்காய் எல்லாம் பழம் !

—ஐ. முகம்மது அலி, செங்கற்பட்டு.

காய்ந்திடில் குற்றக் கருத்துடையோர் என்றிகழ்ந்து
காய்ந்திட்டுப் பேதைமைநீ கொள்ளாதே-காய்ந்தாலும்
நெல்லிக் கனிபோலப் பின்இனிக்கும்; நல்லோர்கள்
சொல்லுவ தெல்லாம் பழம்.

—பா. வேலன், கோவை.

காய்ந்த சருகிட்டுக் கல்லடுப்பில் சோருக்கிச்
சேய்தனக்கு ஊட்டுகின்ற சேல்விழியே !-பாய்ந்தங்கே
வாய்சுவைக்கப் பால்சுரக்கும் வீங்கிய நின்நகில்தான்
காய்த்தும் கனியாப் பழம் !

—பூங்குன்றன், அரக்கோணம்.

காய்கின்ருய் வெய்யில்போல் கற்கண்டே ! மாற்ருன்தன்
வாயிலையான் என்றுமே மேவவிலை—போயொருத்தன்
தேடுவனே கள்ளைத்தான் ! தீஞ்சுவைப் பால்தவிர்த்தே,
நாடுவனே நச்சுப் பழம் ?

—எஸ். கிருஷ்ணசாமி, சுவால்பேட்டை.

காய்ந்த சருகேபோல் கன்னமேல் லாம்சுருக்கம்
வாய்ந்த கிழட்டுக்கோ மாற்றுமணம் ?-மாய்ந்திட்ட
கோவலனை எண்ணிக் குமுறுகிற கண்ணகிநேர்
பாவையரோ தீண்டாப் பழம்.

—சே. கனகசபை, அழகப்பாநகர்.

காய்ந்த இலைபொறுக்கிக் கல்லை அடுப்பாக்கி
ஓய்ந்த வயிறுக் குணவளித்துத்-தேய்ந்திட்ட
கட்டாணி முத்தாம், கனிப்பெண்ணாள் முத்துதிர்க்கச்
சுட்டோம் பனந்தீம் பழம்.

—புதுவை. கோவிந்தம்மை, திண்டிவனம்

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ.எல்.எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நா